Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

**அற்புதன் அச்சகம்**
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 02 புதன்கிழமை (17.12.2014) பக்கங்கள் 20 | ஓசை – 078

# யாழ். செயலகத்தில் கைகலப்பு
# அபிவிருத்தி கூட்டத்தில் அநாகரிகம்




(யாழ்ப்பாணம்)


**யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று கைகலப்பில் முடிவுற்றது. வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையே மூண்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியது. இரு தரப்பும் சபை நடுவே பரஸ்பரம் கைகலப்பில் குதித்தனர்.**

அதன் உச்சக்கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தண்ணீர் போத்தல்களை வீசி எறிந்து தாக்குதல் நடத்த ஆரம்பித்தபோது நிலைமை மோசமடைந்தது. பதிலுக்கு மாகாண சபை மற்றும் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தாக்குதல் நடத்தினர்.

ஒரு கட்டத்தில் இரு தரப்பினரும் தங்களின் நிலை மறந்து சபை வரன்முறைகளையும் கடந்து உணர்ச்சி வசப்பட்டவர்களாக காணப்பட்டனர். அது மட்டுமல்லாமல் நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தாராளமாக பயன்படுத்தினர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதலில் படுகாயமடைந்த ஸ்ரீரங்கேஸ்வரனுக்கு மேலதிக சிகிச்சை



(யாழ்ப்பாணம்)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது கூட்டமைப்பினரின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் யாழ். போதனா வைத்தியசாலையில்

19 ஆம் பக்கம் பார்க்க

# இணைத்தலைமைக்கு கட்டுப்படாததால் விளைந்தது அநாகரிகம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இணைத்தலைமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டுப்படாமையே நேற்றைய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் குழம்பியதற்கான காரணமென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நடந்த நிகழ்வென்பது துரதிஷ்டவசமானது. வருடத்தின் இறுதிக் கூட்டமாக அமையப்பெற்ற இக்கூட்டத்தில் சர்ச்சைகள் எழுந்த போது இணைத் தலைவர் விக்னேஸ்வரன் சமரசத்திற்கு பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் கூட்டமைப்பினர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லையென்பதை அங்கிருந்த ஊடகவியலாளர்கள் நன்கறிவீர்கள்.

ஆனால், வேற்றுமையிலும் ஒற்றுமை காண வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு அமைய நான் இணைத்தலைவரிடம் தெரிவித்திருந்தேன். அத்துடன் இணைத் தலைவர்கள் தான் இறுதி முடிவெடுப்பார்கள் என ஏற்கனவே நாம் தெரிவித்திருந்தோம்.

இந்தச் சம்பவத்தில் எமது தரப்பில் ஐந்து பேர் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ள நிலையில் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு அழைப்பிதழ்கள் யார் யாருக்கு அனுப்பப்

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய சிறையில் இருந்த இலங்கை மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

அத்துமீறி மீன் பிடித்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 30 பேர் மற்றும் அவர்களது 19 படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் டிசம்பர் 22 ஆம் திகதி திங்கட்கிழமை விடுதலை செய்யவுள்ளதாக தமிழக முதல்வர் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல்வர் பன்னீர்செல்வம் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த முதலாம் மற்றும் 11 ஆம் திகதிகளில்

19 ஆம் பக்கம் பார்க்க

# தேர்தல் பிரசாரம் மும்முரம்
# அமைச்சர் பசில் யாழ்ப்பாணத்தில்




(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வதன் ஊடாகவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திகளை முன்னெடுக்கும் அதேவேளை அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஐக்கிய மக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க






நேற்றைய கூட்டத்தில் சிவாஜிலிங்கம், ஐங்கரநேசன் உட்பட பல கூட்டமைப்பு உறுப்பினர்கள் எழுந்து நின்று குழப்பம் செய்வதைக் காணலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தாக்குதலில் காயமடைந்து கிசிச்சை பெற்று வரும் ஈ.பி.பி.டியின் உறுப்பினர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிடுவதைக் காணலாம்.

# யாழ். மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு விசேட திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெய்து வரும் பருவகால மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் பரம்பர் அதிகரித்துள்ளது. நவம்பர் மாதத்தில் 224 நோயாளர்களும், டிசம்பர் மாதத்தில் இது வரை 70 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே அதிகமான நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

எனவே, இந்நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாளை முதல் 20ஆம் திகதி வரை விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் இப்பிரதேசத்திலுள்ள வீடுகளிலும் நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் சுத்திகரிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு வேண்டுகிறோம். இத்தினங்களில் விசேட டெங்கு தடுப்புக் குழுக்கள் வீடுகளையும் நிறுவனங்களையும் தரிசிக்கவுள்ளனர்.

பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி தமது வீடுகளை துப்புரவு செய்து டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து உதவுமாறு இப்பிரதேசத்திற்குப்பட்ட நிறுவனங்களிலும் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுக்குமாறு உள்ளூராட்சி மன்றங்கள் பொது இடங்களை துப்புரவு செய்ய உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் அறிவிக்கபட்டுள்ளது.


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1118

திகதி 15.12.2014

வெற்றி எண்கள்: 31 32 55 57 — ஆங்கில எழுத்து: P

ஜக்பொட் பரிசு ரூ. 4,72,87,260/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,72,87,260/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5 | 50,000/= | ரூ. 2,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 296 | 1,000/= | ரூ. 2,96,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 476 | 1,000/= | ரூ. 4,76,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12691 | 60/= | ரூ. 7,61,460/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6509 | 40/= | ரூ. 2,60,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 165367 | 20/= | ரூ. 33,07,340/= |
| ஆங்கில எழுத்து | 24101 | 20/= | ரூ. 4,82,020/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,33,180/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 47,610,800/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.12.18 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 33546/7

(C/3916)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன் |
|---|---|
| மு.ப. 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள். |
| மு.ப. 07.00 | காலைக் கதிர் |
| மு.ப. 08.00 | நாளிதழ் நேரம் |
| மு.ப. 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| மு.ப. 09.55 | காலை செய்தி |
| மு.ப. 10.00 | ஆரோகனம் |
| மு.ப. 10.30 | சிரிக்க கிரிக்க |
| பி.ப. 11.30 | அதிர்வுகள் |
| பி.ப. 12.30 | HELLO DD |
| பி.ப. 01.00 | மதிய செய்தி |
| பி.ப. 01.30 | காவியத் திரைப்படம் |
| பி.ப. 03.55 | மாலைச் செய்தி |
| பி.ப. 04.00 | மழலைகள் |
| பி.ப. 05.00 | சிரிக்க சிரிக்க |
| பி.ப. 06.00 | நாளிதழ் நேரம் |
| பி.ப. 07.00 | அதிர்வுகள் |
| பி.ப. 08.00 | பிரதான செய்தி |
| பி.ப. 08.30 | HELLO DD |
| பி.ப. 09.00 | திரைப்படம் |
| பி.ப. 11.30 | நீங்காத நினைவுகள் |


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3916)


## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கன்ரர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த காந்தணேசன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் கன்ரர் வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நினைவிழந்த நிலையில் இவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்படும் உடுவில் பிரதேச சிறுவர்கள்

(சுன்னாகம்)

உடுவில் பகுதியில் அதிகளவான சிறுவர்கள் காய்ச்சல் மற்றும் பல்வேறு நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினாலும் வெற்றுக் காணிகள் துப்புரவு செய்யப்படாமலும் உள்ளமையே மாணவர்கள், குழந்தைகள் உட்படப் பலர் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றினால் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் கூடுதலான பொது மக்கள் தமது பிள்ளைகளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லாது வைத்தியர்களிடம் கிளினிக்கில் காட்டுவதுடன் பாமசிகளிலும் மருந்து வில்லைகளை பெற்றுக்கொடுத்து வருகின்றனர் என சமூக நலன் விரும்பிகள் சிலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே சுகாதாரப் பிரிவினர் அக்கறை எடுத்து மக்களையும் குழந்தைகளையும் காக்க முன்வரவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் பிரதேசங்களிலுள்ள குடும்ப நல உத்தியோகத்தர் மூலம் அப்பிரிவிலுள்ள குழந்தைகளின் சுகாதாரம், நோய் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் நேற்று மூவர் டெங்கு நோய்த்தாக்கத்திற்குட்பட்ட நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் கோப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் இருந்தே இந்த மூவரும் அனுமதிக்கப்பட்டதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

மேலும் இந்த மாதம் நேற்று வரை இவ்வாறு 65 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# 'மாருதப் புரவீகம்' மலர் வெளியீடு

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினரால் 'மாருதப்புரவீகம்' என்னும் பண்பாட்டு மலர் வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கலாசார விழாவும் கலைஞர் கௌரவிப்பும் தெல்லிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் கலாசாரப் பேரவைத்தலைவரும் பிரதேச செயலாளருமாகிய க.சிறீமோகனன் தலைமையில் இடம்பெற்ற போது மேற்படி நூல் முதற் தடவையாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நூலினை யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் பெற்றுக் கொண்டார்.

கலை, இலக்கியம், இசை, நாடகம், வரலாறு, பண்பாட்டு, மண்ணின் மகிமை சமயம் என்பன உள்ளடக்கிய வகையில் 31 ஆக்கங்கள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. இவ் ஆக்கங்களினை துறைசார்ந்த புலமை பெற்றவர்கள் ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)



சாவகச்சேரி பொலிஸ் நடமாடும் சேவையினர் கைதடி நாவற்குழி மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தினை சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதனைக் காணலாம்... (51)


# சிகை ஒப்பனை நிலையங்களுக்கு நேரக்கட்டுப்பாடுகள் தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களுக்கும் நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய தினங்களை முன்னிட்டு நேரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருப்பதுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் நிலையங்களை திறந்து சேவையாற்றுவதற்குரிய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், சங்கானை, தீவகம், அச்சுவேலி, தென்மராட்சி, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய சிகை ஒப்பனையாளர் சங்கக்கிளையினருக்கு இது தொடர்பாக அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் நந்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய தினங்களை முன்னிட்டு நாளை வியாழக்கிழமையிலிருந்து எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரை நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் 11, 21, 28, ஆகிய திகதிகளில் தொழில் நிலையங்களை திறந்து மக்களுக்கு சேவையாற்றுமாறும் நந்தார் தினத்தன்று விடுமுறை வழங்குமாறும் யாழ்.மாவட்ட ஒப்பனையாளர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

# தலைமை மாற்றம் என்பது தமிழ் மக்களுக்கும் வேண்டும்






"ஆட்சி மாற்றம் வேண்டும்" என்று யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்று தலைப்புச் செய்தியைப் போட்டிருக்கு.

ஆட்சி மாற்றம் என்றால், அது எப்படியான மாற்றம் என்று அந்தப் பத்திரிகை எழுதவுமில்லை குறிப்பிடவுமில்லை.

ஆட்சி மாற்றம் வேண்டும் என்று விரும்புகின்ற ரோசத் தமிழர்களுக்கும் இதைப் பற்றிய விளக்கம் கிடையாது.

பெரும்பாலானவர்கள் ஆட்சிமாற்றம் என்றால், ஆள்மாற்றம் தலை மாற்றம் என்றே நினைக்கிறார்கள்.

தலையை மாற்றிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற பேதைத்தனமான நம்பிக்கை இது.

இந்தமாதிரி மூடத்தனமான நம்பிக்கை எத்தனை தடவை பிழைத்திருக்கிறது?

ஆனாலும் இந்த நம்பிக்கையைக் கைவிடத் தயாரில்லை. இவர்களுக்கு இது ஒரு வருத்தம் – தீராத உளவியல் நோய்.

இப்பொழுது ஆட்சியில் இருக்கின்ற ஜனாதிபதிக்கு மாற்றாக இன்னொரு ஆள் வரவேண்டும் என்றால் அவர் இவரையும் விட பலவிதங்களில் மேலானவராக, சிறப்பானவராக இருக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்த்தரப்பாக கருதப்படுகின்ற மைத்திரி எத்தகைய பலத்தை உடையவர்? மேலான ஆளுமையையும் சிறந்த மனிதாபிமானத்தையும் கொண்டவரா?

இந்தக் கேள்விக்கு இன்னும் சரியான பதில் எவரிடமும் இல்லை.

அதைவிட சிறுபான்மைச் சமூகங்களைப் பற்றிய பேச்சையே மைத்திரி எடுக்கவில்லை.

இரண்டு தடவை ஆட்சியிலிருந்த மகிந்த ராஜபக்ஷவிடம் சில விடயங்களில் திருப்தியில்லை என்பது உண்மையே.

என்றாலும் இரண்டு தலைகளில் ஒன்று ஒப்பீட்டளவில் பரவாயில்லை.

அதாவது தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசு பரவாயில்லை என்ற மாதிரியான நிலை.

இது கொழும்பு அரசியல் நிலவரம்.

**கொழும்பில் அரசியல் மாற்றம் வேண்டும், அங்கே தலைகளின் மாற்றம் வேண்டும் என்று கேட்டவர்கள், தமிழ் மக்களுக்கும் அத்தகைய மாற்றம் வேண்டும் அவர்களுடைய தலைமையும் மாற வேண்டுமே.**

**ஏனென்றால், அரசியல் தீர்வையும் எட்டமுடியாமல், மக்களின் வாழ்க்கையையும் மேம்படுத்த முடியாமல் காலத்தைப் போக்குகின்ற ஒரு அரசியல் தலைமை இன்னும் தேவைதானா?**

தாங்கள் பதவிகளைப் பிடிப்பதற்கான தேர்தல்களில் மட்டும் தமிழ் மக்களிடம் வந்து வீராவேசமாக முழங்கிக் கொள்கிறார்கள். ஒட்டுமொத்தமாக நாட்டின் கதியை நிர்ணயிக்கக்கூடிய தேர்தலில் எந்தவொரு பங்கினையும் ஆற்ற முடியாமல் பம்முகிறார்கள்.

முஸ்லிம் காங்கிரசும், மலையக தொண்டமான் கட்சியும், ஹெல உறுமயவும் மற்ற மற்ற சிறு சிறு கட்சிகளும் கூட பெறும் முக்கியத்துவத்தையோ பேரம் பேசும் ஆற்றலையோ பெரும்பான்மைத் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகக் கூறிக்கொள்ளும் இந்தத் தலைமையால் பெறமுடியவில்லை.

எதிர்த் தரப்பையும் மற்றும் சர்வதேசத் தரப்புகளின் சறுக்கல்களையும் குற்றம்குற்றமாய்ச் சொல்லிவிட்டுச் சும்மா போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர, தமிழ்மக்களது தேவைகளையோ தீர்வையோ எடுத்துத்தரும் முயற்சியில் இவர்களால் இம்மியளவும் எதையும் சாதிக்க முடியவில்லை.

இந்த நிலைமையில், தமிழ் மக்களும் தங்களுடைய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவையோடுதான் உள்ளனர்.

இதை தமிழ் ஊடகங்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இதை மறைத்து தமிழ் ஊடகங்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் மக்களை மயக்கத்தில் வைத்திருக்கலாம்.

ஆனால், கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்டமாதிரி, இவர்களுடைய எல்லாப் பொய்களுக்கும் ஒரு மயானம் உருவாகி வருகிறது.

ஆட்சி மாற்றம், தலைமை மாற்றம் என்பதெல்லாம் வேறு யாருக்கும் என்பதை விட, வெளியே என்பதைவிட தமிழ்த் தரப்பில்தான் அவசியம் வேண்டும் அது நடந்தே தீரும்.

தன்னைத் தானே சீர்திருத்திக் கொள்பவன்தான் உலகிலேயே மிகச் சிறந்த சீர்திருத்தவாதி. - பெர்னாட்ஷா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பக்கம் சாய்ந்த ஊடக தர்மம்?

நேற்று யாழ்மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் இடையே பரஸ்பரம் வாய்த்தர்க்கம் முற்றி அடிதடியானதில் இடைநிறுத்தப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் ராஜ்குமார், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் உட்பட ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஐந்து பேரும்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களான வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் ஆகியோரும் காயமடைந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குச் சார்பான இணையத் தளங்களெல்லாம் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது ஈபிடிபியினர் தாக்குதல்" என்றே இந்தச் செய்தியைப் பிரசுரித்திருக்கின்றன.

ஆனால் அவர்கள் தந்திருக்கும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட வீடியோ இணைப்புகளைப் பார்க்கும் எவருக்கும் பெரும்பான்மையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களே தாக்குதல்களை அதிகளவில் நடத்தியிருப்பதைப் பார்க்க முடியும்.

தன்னைத் தாக்கிக் காயப்படுத்தி விட்டதாக பரிதாப முகத்துடன் பேட்டியளித்திருக்கும் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களும் அந்த வீடியோக் காட்சிகளில், இரண்டு தடவைகள் தண்ணீர்ப் போத்தல்களை எதிர்த்தரப்பை நோக்கி ஆக்ரோசமாக வீசி எறிவதைத் தெளிவாகக் காணமுடிகிறது.

இரண்டு தரப்புமே வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பில் ஈடுபட்டதை அந்த வீடியோக் காட்சிகளில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கும்போது, உடனடியாக வெளியே ஓடிவந்துநின்றுகொண்டு, "மக்கள் பிரதிநிதிகளைத் தாக்கிவிட்டார்கள்" என்று கூட்டமைப்பினர் ஓலமிடுவதைச் செய்தியாக வெளியிடும் ஊடகங்கள் தாங்கள் பக்கச் சாய்வானவர்கள் மட்டுமே என்பதையே விளம்பரப்படுத்துகின்றன.

அமைச்சரின் இணைப்பாளர்களைத் தவிர, அங்கு வந்திருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கூட பாராளுமன்ற, மாகாண, பிரதேசசபைத் தேர்தல்களில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள்தான் என்பது எல்லோருக்கும் – குறிப்பாக ஊடகத்தினர் எல்லோருக்கும் தெரியும்.

அப்படியிருக்கையில், எப்படி இந்த 'மக்கள் பிரதிநிதி' கதையை ஊடகங்கள் விழுங்கி வெளியிடுகிறார்கள் என்று தெரியவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்புப் பிரிவினர் உள்ளே வந்தது ஏன் என்றும் கேள்வி எழுப்புகிறார்கள்.

அந்தக் கேள்வியிலிருந்தே தெரிகிறது அவரை நோக்கியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். அமைச்சருக்கு அடிகள் விழாமல் சுற்றிநின்று காப்பதற்குத்தான் பாதுகாப்புப் பிரிவினர் வந்திருக்கிறார்கள். கூட்டமைப்பினரின் வன்முறையைத்தானே இது காட்டுகிறது!

இவர்கள் ஆயுதப்போராட்ட காலத்திற்கு முன்பேயே எதிர்க்கட்சிக் கூட்டங்களை கூழ்முட்டை எறிந்தும் கல்லெறிந்தும் குழப்பியடிப்பதிலும் வன்முறைகளைத் தூண்டிவிடுவதிலும் புகழ்பெற்றவர்கள். நேற்றைய கூட்டத்திலும் அமைச்சர் டக்ளஸின் பேச்சைக் குழப்பியே சண்டையை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டு கிழமைக்கு முன்னர் மாகாண சபையில் செங்கோலை தூக்கி வீசியடித்து தன்னைச் சண்டியனாகக் காட்டிக்கொள்ள அவதிப்பட்ட அதே சிவாஜிலிங்கம்தான் நேற்றைய கூட்டத்திலும் தனது வீரத்தைக் காட்டி சண்டையை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

அவர்கள் திட்டமிட்டு வலிந்து சண்டைக்கிழுப்பதை உணர்ந்து கொள்ளாமல் கைகலப்பில் இறங்கிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரையும் நாம் கண்டிக்க வேண்டும். அதேசமயம் வன்முறையைக் கிளப்பி வன்முறையில் பட்டவர்த்தனமாக ஈடுபட்ட கூட்டமைப்பினரை கண்டிக்காது தட்டிக்கொடுக்கும் ஊடகங்களை நோக்கி மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். - *ஆசிரியர்*

# இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவியுங்கள்

## நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

நீர்கொழும்பு நகரில் ஒன்றுகூடிய இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் உறவினர்கள் மற்றும் ஏனைய மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நட்வடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய அரசாங்கம் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

எமது மீனவர்களை விடுதலைசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திருப்தியடைய முடியாதென்று கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், எதிர்வரும நத்தார் தினத்திற்கு முன்பு இவர்களை விடுதலைசெய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

எனினும் இது சம்பந்தமாக கருத்துகளை தெரிவித்துள்ள மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன இந்தியாவில் தடுத்துவைக்கப் பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான தலையீடுகளை மேற்கொள்வதற்கு சட்டரீதியாக இலங்கை அரசாங்கத்திற்கு அவகாசம் இல்லை என்று கூறினார்.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொதுமன்னிப்பொன்றின் கீழ் மாத்திரமே இவர்களை விடுவிக்க முடியுமென்று கூறிய அமைச்சர் குணரத்ன, இவ்வாறான பொதுமன்னிப்பொன்றை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

எனவே மக்கள் பொறுமை காக்க வேண்டுமென்று கூறிய அமைச்சர் சரத் குமார குணரத்ன, ஆர்ப்பாட்டங்களை நடத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முடியாதென்றும் கூறினார்.

# ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் எனக்கும் இழைக்கப்பட்டது அநீதி

## இப்படிக் கூறுகிறார் சபாநாயகர் சமல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் தனக்கும் அநீதி இழைக்கப்பட்டதாக, பொதுக்கூட்டம் ஒன்றில் பகிரங்கமாக புலம்பியிருக்கிறார் நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ.

ஜனாதிபதியின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷ காலியில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறியிருக்கிறார்.

2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த போது, இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது நீதியான முறையில் எனக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

விவசாய அமைச்சைக் கவனிக்கும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர் பொறுப்பே வழங்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தித்துறை இல்லாத, நீர்ப்பாசன அமைச்சு என்னிடம் தரப்பட்டது.

அதுபற்றி நான் அப்போது கேட்ட போது, அதனை மைத்திரிபால சிறிசேன தனக்குத் தர வேண்டும் என்று கேட்டதாக எனக்குக் கூறப்பட்டது.

ஆனால் எப்போதுமே மகாவலி அபிவிருத்தி அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சின் கீழ் தான் இருந்து வந்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனவும், நானும் ஒன்றாகவே 1989ஆம் ஆண்டு, முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானோம்.

இந்த இடத்தில் எனக்கு அநீதி இழைக்கப்பட்டது.

பதவிகள், முக்கியமல்ல. நாட்டு மக்களுக்கு நாம் செய்யும் சேவை தான் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசியகடனை குறுக்கு வழியில் குறைத்துக்காட்டுகிறது அரசு

## சம்பிக்க தெரிவிப்பு

இலங்கை அரசாங்கம் தேசிய கடனை பல்வேறு குறுக்கு வழிகளில் குறைத்துக் காட்டுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் இருந்து அண்மையில் விலகிய முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

"வீழ்ச்சி கண்ட பொருளாதாரம்" என்ற பெயரில் நேற்று முன்தினம் நூல் ஒன்று வெளியிடப்பட்டது.

இதன்போது உரையாற்றிய சம்பிக்க ரணவக்க,

அரசாங்கம் தனது கடன்படுகையை சிறிய நிறுவனங்களுக்கு மாற்றிவிடும் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

உதாரணமாக, புத்தளம் அனல் மின்சார நிலையத்துக்காக பெற்றுக்கொள்ளப் பட்ட கடனை அரசாங்கம் லங்கா அனல் நிறுவனத்துக்கு மாற்றி விட்டது.

இதன்காரணமாக இறுதியில் பொதுமக்களே கடன்களையும் அதற்கான வட்டிகளையும் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை அரச வங்கிகளிடம் இருந்து பெறும் கடன்களுக்கான வட்டிகளை மக்கள் வங்கி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை போன்றவை செலுத்துகின்றன.

இதன்காரணமாகவே பொது மக்கள் அதிகமான மின்சாரக் கட்டணங்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நகர அபிவிருத்திகள் என்ற பெயரில் நகரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு பாதைகள் அதிவேக பாதைகளாக மாற்றப்படுகின்றன.

எனினும் இதற்காக 7 வீத வட்டியில் கடன்கள் பெற்றுக் கொள்ளப்படுவதாக ரணவக்க தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரம் முதியவர்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரத்து 756 முதியவர்கள் வசித்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழ் 8 ஆயிரத்து 560 முதியவர்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் 2 ஆயிரத்து 661 முதியவர்களும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 578 முதியவர்களும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 957 முதியவர்களும் வசித்து வருகின்றனர்.

சமூக சேவைகள் அமைச்சின் முதியவர்களுக்கான கொடுப்பனவு, முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு பொது நிறுவனங்களில் முன்னுரிமையளிக்கப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன.

பெரும்பாலான முதியவர்கள் உறவினர்கள் வீடுகளில் போதிய பராமரிப்பின்றி வாழ்கிறார்கள். அவர்களின் நலன்களை மேம்படுத்தும் வகையில் சமூக சேவைகள் அமைச்சால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### கலாநிதி. தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து

# சிறிசேனவின் எழுச்சி அலை: ஏன் மகிந்த இன்னும் முன்னணியில் நிற்கிறார்

மைத்திரிபால சிறிசேனவின் எதிர்ப்பு மற்றும் கிளர்ச்சி நடவடிக்கைகள் வீரம் நிறைந்ததாக இருப்பதையிட்டு லேசான உற்சாகம் உண்டாகிறது. ஏன் முற்றாக மகிழ்ச்சி அடையவில்லை? ஏன் பூரண மகிழ்ச்சி இல்லாமல் லேசான உற்சாகம் மட்டும் உண்டாகிறது?

மைத்திரிபால சிறிசேன இந்த தேர்தல் நிகழ்வை எதிர்பார்த்ததுக்கு மாறாக யாராலும் எதிர்வு கூற முடியாத முற்றிலும் வித்தியாசமான 'கறுப்பு அன்னம்' என்று சொல்லப்படும் ஒரு நிலைக்கு கொண்டு வந்துவிட்டார் என்பதால் அவர் அன்பான பாராட்டுக்கு உரித்துடையவராகிறார், விளையாட்டின் போக்கை திசை திருப்பிய ஒரு உண்மையான மாற்றீட்டாளர்.

ரணில் விக்கிரமசிங்கவை எதிரணி பொது வேட்பாளராக நிறுத்தக்கூடாது என்று அச்சு ஊடகங்களிலும் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் வருடக் கணக்காக விவாதிக்கப்பட்டதின்படி, சாத்தியமான எதிரணி வேட்பாளர் தற்போது ஆட்சியில் உள்ளவரின் ஏகபோக நாட்டுப்பற்றுக்கான சுயபிரலாபத்தை உடைத்தெறியத் தக்க வகையில் சுய விபரக் குறிப்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது.

அந்தவகையில் மைத்திரிபால சிறிசேனவின் வேட்பாளர் நியமனம் என்னை மகிழ்ச்சியடைய வைத்தது. எனினும் அவரது தேர்தல் வாய்ப்புகள் மற்றும் மேடைகள் என்பன எனக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

மகிந்தவின் எதிர் போட்டியாளர் ரணில் என்கிற நிலையை இல்லாதாக்கி அதற்குப் பதிலாக ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஒரு உண்மையான போட்டியை ஏற்படுத்தியுள்ளார். மிகவும் முக்கியமாக இதுவரை ஒருமுனையில் மட்டுமே போட்டி என்று இருந்த நிலையில் அவர் ஒரு போட்டி மற்றும் சமநிலை என்பனவற்றை அறிமுகப்படுத்தியுள்ளார்.

அதன்படி ஒரு பாராளுமன்றத் தேர்தலிலோ அல்லது ஒரு பொது வாக்கெடுப்பிலோ தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிக்கும் சாத்தியமான வாய்ப்பை தோற்றுவித்துள்ளார்.

அது அவரது உயர்ச்சி, இப்போது வீழ்ச்சிக்கு வருவோம். கூட்டு எதிரணியை ஆரம்பித்தவர்களின் திட்டம் பற்றி பரவலாக உலாவிய வதந்தியான வரவு செலவு திட்டத்தை தோற்கடிக்கும் முயற்சி குறுகிய நோக்கம் கொண்டதாக இருந்தது.

அந்த வரவு செலவு திட்டமானது அதன் உள்ளடக்கத்திலும் மற்றும் குணாதிசயத்திலும் ஜனரஞ்சக நோக்கம் கொண்டதாக இருந்தது, மற்றும் பாராளுமன்றத்தில் அதற்கு ஏற்படும் எந்தத் தோல்வியும், பொதுமக்களுக்கு பொருளாதார ரீதியாக கிடைக்கவிருந்த நன்மைகளுக்கு அனுமதி அளிக்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டதாக கூட்டு எதிரணிமீது நம்பிக்கையான குற்றச்சாட்டை சித்தரிக்க ஜனாதிபதிக்கு அனுமதி வழங்கியிருக்கும்.

அமெரிக்க காங்கிரஸ் ஜனாதிபதி ஒபாமாவிற்கு முட்டுக்கட்டை போட்ட போது அமெரிக்க மக்கள் செய்தது போல, பொதுமக்களின் கருத்து பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு எதிராகவும் ஆட்சியிலுள்ள ஜனாதிபதிக்கு ஆதரவாகவும் திரும்பும். அதனால் அவர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்து ஜனாதிபதி தேர்தலை நடத்துவார், மற்றும் தனது வெற்றியை புதுப்பிக்கப்பட்ட ஆதிக்கமுள்ள பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்திருப்பார்.

அதுகூட மைத்திரிபால சிறிசேனவின் சவாலின் பிரதான பலவீனமாக இருக்கவில்லை. ஊடக மாநாட்டின் தொடக்க விழாவில் காட்சிப்படுத்தப்பட்ட கூட்டு எதிரணியின் மேடையில் குறைபாடுகள் இருந்தன. அதில் மைத்திரிபால சிறிசேன கிட்டத்தட்ட குறையில்லாமல் நன்றாகச் செயலாற்றி இருந்தார்.



பின்னர் ராஜித சேனாரத்ன தனது அரசியல் சுயசரிதையைப் பற்றி நீண்ட நேரம் பேசத் தொடங்கியதும், அது கடந்த காலத்தை பிரதிபலிக்கத் தொடங்கியதுடன் அதில் தொய்வும் உண்டானது - அதைத் தொடர்ந்து சந்திரிகா குமாரதுங்கவின் நீண்ட சுய நியாயப்படுத்தும் புலம்பல்.

இது மைத்திரிபால நாட்டுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை வழங்க அனுமதிக்கப் படுவாரா - ஒரு அன்பான ஆட்சியை - அல்லது பண்டாரநாயக்காக்களின் பொற்காலத்தை விசேடமாக சந்திரிகா பண்டாரநாயக்காவின் காலத்தை திரும்பக் கொண்டுவருவதற்காக சொல்லப்படும் செய்தியா என்கிற கேள்வியை கேட்க வைக்கிறது. இது சிறிய ஒரு பின்விளைவு அல்ல.

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் தெளிவாகவும் மற்றும் உறுதியாகவும் விரும்புவது குறைபாடுகள் இருந்தாலும் சமாதானமான நிகழ்காலத்தையே தவிர, கடந்த காலத்திலிருந்த யுத்தம் நிறைந்து பலவீன நிலையிலிருந்த தேசத்தை அல்ல.

குறைபாடான நிகழ்காலத்தையும் மற்றும் கடந்தகால நினைவுகளையும் காட்டி வெறுமனே தேர்வு செய்யும்படி சொன்னால் வாக்காளர்கள் சந்திரிகாவின் கடந்த காலத்தைக்காட்டிலும் மகிந்த ராஜபக்ஸவின் நிகழ்காலத்தையே - அவரது உடன்பிறப்புகள் மற்றும் அனைத்தையும் - நிச்சயம் தெரிவு செய்வார்கள்.

அப்போது நாடு துண்டாடப்பட்டு அரசாங்கம் பலவீனமான நிலையில் இருந்தது. இப்போது நாங்கள் சமாதானமாகவும் மற்றும் மிகவும் வலுவான நிலையிலும் உள்ளோம். இது சந்திரிகாவோ அல்லது ராஜிதவோ புரிந்து கொள்ளத் தவறிய ஒரு விடயம் போலத் தெரிகிறது.

மைத்திரிபால சிறிசேன தன்னை முன்புலத்தில் நிறுத்த வேண்டும் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை அல்ல. கிளின்டன் ரீகனை விடவும் மற்றும் டோனி பிளேயர் தச்சரை விடவும் மென்மையான அனுதாபத்துக்கு உரியவர்களாகத் தோன்றி தங்களுக்கு முன்பு பதவியில் இருந்தவர்களின் வல்லமைகளை பலப்படுத்தி ஒருங்கிணைத்தது போல, சிறிசேனவும் மகிந்த ராஜபக்ஸ முன் மக்களின் மென்மையான அனுதாபத்துக்கு உரியவராகத் தோன்றும் அதேவேளை கடந்த காலத்தை நோக்கிப் பின் செல்லாமல் எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டும்.

இந்தப் பலவீனங்களின் கூட்டுத்தான் மைத்திரிபால சிறிசேனவின் பிரச்சார மேடையில் உள்ள, நூறு நாட்களுக்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து ரணில் விக்கிரமசிங்காவை பிரதமராக்குவதாக அளித்துள்ள வாக்குறுதி எனும் மிகவும் பலவீனமான விடயம்.

**இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் தெளிவாகவும் மற்றும் உறுதியாகவும் விரும்புவது குறைபாடுகள் இருந்தாலும் சமாதானமான நிகழ்காலத்தையே தவிர கடந்த காலத்திலிருந்த யுத்தம் நிறைந்து பலவீன நிலையிலிருந்த தேசத்தை அல்ல.**

முதற்கண் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு பெரும்பாலான வாக்காளர்கள் விரும்புகிறார்களா என்று மக்களின் கருத்துக் கணிப்பை அளவிடும் பொது வாக்கெடுப்பு எனும் வடிவத்திலான ஒரு ஆதாரமும் அதில் இல்லை. இதன்படி மைத்திரிபாலவின் பிரச்சாரம் மக்களை மகிந்த ராஜபக்ஸவிடம் இருந்து திருப்பி மற்றும் தீவிரமான ஆபத்து சாத்தியமுள்ள ஒரு முழு அமைப்பையும் அழிப்பதற்கு ஒன்றல்ல இரண்டு விடயங்களில் மக்களை இணங்கவைக்க வழி தேடவேண்டியுள்ளது.

இது ஜனாதிபதி தேர்தலை ஒரு இரட்டைக் கருத்துக் கணிப்பாக மாற்றிவிடும் - பல தசாப்தங்களாக வெகு ஜனங்களுக்கு பழக்கமாக இருந்துவரும் நிறைவேற்று ஜனாதிபதி என்கிற அரசியல் காட்சியில் மகிந்த ராஜபக்ஸ ஆதிக்கம் செலுத்தி வருகிறார். இப்போது அது சொல்வதற்கு கடினமான ஒரு விடயம். ஒரு பழமைவாத சமூகத்தில் உளவியல் மாற்றத்தை மிகவும் குறுகிய காலத்தில் மற்றும் ஒரே அடியில் கொண்டுவருவதற்கு எதிர்பார்ப்பது ஜீரணிக்க முடியாத ஒன்று. அத்துரலிய ரத்தன்ன மற்றும் சம்பிக்க ரணவக்கவின் ஆலோசனையான ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கும் விடயம் அதிகம் விரும்பத்தக்க ஒன்று.

இந்த நிலைமை போதாது என்றால், ரணிலை பிரதமராக்குவதாக மைத்திரிபால வழங்கியுள்ள வாக்குறுதி வேறு இருக்கிறது. நூறு நாட்களுக்குப் பின்னர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இல்லாமல் போவதுடன் அதேவேளை ரணில் பிரதமராக வருவதற்காகவும் யாராவது ஒருவர் ஏன் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும்?

மேலும் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டதின் பின்னர் அதிகார மையத்தில் பிரதமரே வீற்றிருக்கப் போகிறார், ஒரு நாள் மக்கள் விழித்தெழும் வேளையில் தங்களை அறியாமலே தாங்கள் தலைவராக ரணிலை தெரிவு செய்திருப்பதை காண நேரும்? இல்லாவிட்டால் மைத்திரிபால நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்க நேர்ந்தால் ரணிலுக்கு என்ன நடக்கும்?

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிக்காக போட்டியிட்டால் அவருக்கு வாக்களிப்பதற்கு ஏராளமான தூய மற்றும் எளிய காரணங்கள் உள்ளன. ஆனால் ரணில் மற்றும் சந்திரிகா மீண்டும் அதிகாரத்தில் அமர்வதற்காக மட்டும் யாராவது ஏன் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும்? 2005ல் அவர்கள் மகிந்தவை தோற்கடிக்க முயற்சித்தார்கள் ஆனால் வெற்றி பெறவில்லை. நாங்கள் முன்னுக்குச் செல்ல வேண்டுமா அல்லது பின்னுக்குச் செல்ல வேண்டுமா?

தெளிவான வரைபடம் ஒன்று இல்லாமல் குழப்பம் மற்றும் அரசியல் வெற்றிடம் என்கிற தெரிவை மேற்கொள்ளும்படி வாக்காளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள். இப்போது பொது எதிரணி மேற்கொள்ளும் பிரசங்கம் வெறும் வெத்து வேட்டு மட்டுமே.

மகிந்த ராஜபக்ஸ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகிய இருவருக்குமே அந்தந்த அணிகளில் முகமூடிகள் அல்லது மனிதக் கேடயங்கள் உள்ளன. மகிந்தவுக்கு பேராசை மிக்க அவரது குடும்ப மையத்தைக் கொண்ட தன்னலக் குழுவும் சிறிசேனவுக்கு சந்திரிகா, ரணில் மற்றும் பழைய காவலர்களும் உள்ளனர்.

இந்த இரண்டு சேர்க்கைகளில், கூட்டு சிங்கள வாக்காளரின் மனப்போக்கு நிச்சயமாக மைத்திரிபால, ரணில், மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்காவை விட மகிந்த மற்றும் கோத்தபாயா சேர்க்கையையே தெரிவு செய்வதாக இருக்கும்.

**நூறு நாட்களுக்குப் பின்னர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இல்லாமல் போவதுடன் அதேவேளை ரணில் பிரதமராக வருவதற்காகவும் யாராவது ஒருவர் ஏன் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும்?**

# போரின் மூலம் அடையமுடியாதவற்றை புலிகள் தேர்தலின் மூலம் பெறமுயற்சி

## சந்திரிக்கா, ரணில், மைத்திரியும் ஆதரவு என்கிறார் லக்ஷ்மன்

(கொழும்பு)

போரின் மூலம் அடைய முடியாதவற்றை புலம்பெயர் புலிகள் தேர்தல் மூலம் அடைய முயற்சிப்பதாக அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மஹியங்கனை தம்பான வேவத்த பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய அவர், சந்திரிக்கா, மைத்திரிபால, ரணில் போன்றவர்கள் ஐரோப்பிய புலிகளின் பணத்தைப் பெற்றுக் கொண்டு மீண்டும் நாட்டைக் காட்டிக்கொடுக்க முயற்சிக்கின்றனர்.

நாட்டை நேசிக்கும் எவரும்



இதற்கு ஏமாந்துவிடக் கூடாது. இந்த மூன்று பேரின் துரோகச் செயலுக்கு மங்கள சமரவீரவும் ஒத்துழைப்பு வழங்குகின்றார்.

நாட்டைப் பாதுகாத்து நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த தலைவருடனேயே மக்கள் இருக்கின்றார்கள்.

போரின் மூலம் அடைய முடியாதவற்றை இந்த மூன்று பேரையும் கொண்டு புலம்பெயர் புலிகள் தேர்தல் ஊடாக அடைவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதனைப் புரிந்து கொண்ட திஸ்ஸ அத்தநாயக்க நாட்டின் மீது கொண்ட பற்றுக் காரணமாக ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார்.

எதிர்வரும் நாட்களில் மேலும் பலர் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்வார்கள். நாட்டை ஆட்சி செய்யக்கூடிய ஆளுமை உடைய ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ச மட்டுமே என லக்ஸ்மன் செனவிரட்ன தெரிவித துள்ளார்.


# முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் வெளிநாடு செல்வதற்கு தடை

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை வெளிநாடு செல்லக் கூடாது என கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கண்டிப்பான உத்தரவை நேற்று முன்தினம் இரவிலிருந்து பிறப்பித்தார்.

ஒவ்வொரு உறுப்பினர்களின் நம்பகத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்தத தீர்மானத்தை தாம் எடுத்துள்ளதாக ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ இதுவரை தமது முடிவை உத்தியோகபூர்வமாக வெளி



யிடாத நிலையில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் வெளிநாடு செல்வதற்கு நேற்று முன்தினம் மாலை கட்சித் தலைவரான ஹக்கீமிடம் அனுமதி கோரினார் எனவும், இதனையடுத்தே குறித்த கண்டிப்பான உத்தரவை மு.காவின் தலைவர் ஹக்கீம் பிறப்பித்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கண்காணிப்பு அமைப்புகள் பக்கச்சார்பாக செயற்பாடு

## அரசாங்கம் குற்றச்சாட்டு




தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் சில பக்கச்சார்பாக செயறபடுவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளர் அனுரபிரியதர்சன யாப்பா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் இரு தரப்பிலும் உள்ள நிறை குறைகளை பக்கச்சார்பற்ற முறையில் வெளிப்படுத்த வேண்டும். மாறாக, எப்பொழுதும் அரசாங்க தரப்பிற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதை அனுமதிக்க முடியாது.

சில கண்காணிப்பாளர்கள் முறையாகச் செயற்படாமல், பக்கச்சார்பாக செயற்படுவது தொடர்பாக விரைவில் தான் வெளிப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் 15 ஆயிரம் கண்காணிப்பாளர்கள்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில், வெளிநாடு மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதற்கமைய தெற்காசிய மற்றும் தென் கிழக்காசிய நாடுகளிலிருந்து 35 கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜப்பான், தாய்லாந்து, பங்களாதேஷ், நேபாளம், பிலிப்பைன்ஸ், இந்தியா. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்தே வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை வரவிருக்கும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து குழுக்களாக நாடு முழுவதும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவரெனவும் அவர் குறிப்பிட்டார்.

பவ்ரல் அமைப்பு 15 ஆயிரம் கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக 360 வாகனங்களையும் கண்காணிப்பு பணிகளுக்காக ஈடுபடுத்தவுள்ளது. வடமேல் மாகாணத்திலிருந்தே அதிகளவிலான தேர்தல் முறைப்பாடுகள் தமக்கு கிடைப்பதாக தெரிவித்த நிறைவேற்றுப் பணிப்பாளர், தேர்தல் சட்ட விதிமுறைகளை சரிவர பின்பற்றுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரிடம் ஒத்துழைப்பு கோரியிருப்பதாகவும் கூறினார்.

# புலம்பெயர் புலிகளால் நீங்கவில்லை ஆபத்து

## கூறுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் வலையமைப்புகளால் நாட்டுக்கு இன்னமும் ஆபத்து உள்ளதாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாணந்துறையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

இலங்கையில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும், வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் வலையமைப்புகளால் நாட்டுக்கு இன்னமும் ஆபத்து உள்ளது.

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் தமக்கென சொந்தமாக



ஒரு நாடாளுமன்றத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

அவர்கள் இலங்கையின் நலன்களுக்கு எதிராகப் பணியாற்றுகின்றனர்.

வெளிநாடுகளில் இயங்கும் இத்தகைய குழுக்களின் நடவடிக்கைகள் குறித்தும், அவர்களுக்கு ஆதரவாக உள்நாட்டில் செயற்படுவோர் குறித்தும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் இலங்கையில் மீண்டும் தலையெடுக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கமும், மக்களும் தொடர்ந்து தீவிரவாதத்துக்கு எதிராக போராட வேண்டும்.

தேர்தலுக்குப் பின்னரும், போரில் பெறப்பட்ட வெற்றியை நிலைப்படுத்திக் கொள்வதற்கு, வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# உயிருக்கு ஆபத்து என்பதால் வெளிநாடு சென்றேன்

## என்கிறார் ஹிருனிகா



தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட நிலையில் தமக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமையவே நாட்டை விட்டு தாயுடன் தாம் வெளியேறியதாக் மேல் மாகாணசபையின் உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்க எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்தே இவ்வாறு தமக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவும், ராஜித சேனாரட்னவுமே வெளிநாடு செல்லுமாறு ஆலோசனை வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

தமது உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை கருத்திற் கொள்ளாது தொடர்ச்சியாக பிரசாரத்தில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவிடம் பெற்றுக்கொண்ட இலஞ்சப் பணத்தை வைப்பிலிடுவதற்கு வெளிநாடு சென்றதாக சில ஊடகங்கள் பிழையான செய்திகளை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிரான சேறு பூசல்களை கண்டு அஞ்சப் போவதில்லை எனவும் நீதிக்காக போராடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாத கடைசிவாரம் வரை கட்சித் தாவல்கள் ஒத்திவைப்பு

ஆளும் மற்றும் எதிரணி தரப்பு கட்சி மாறல்கள் இம் மாதம் கடைசி வாரம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் குறித்து உறுதியற்ற தகவல்கள் வெளியாகிக்கொண்டிருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இரண்டு தரப்பிலும் கட்சி மாறல்களுக்கு எதிர்பார்ப்போர் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற கொள்கையை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை அரசாங்கத்தின் அரைவாசியினர் தமது பக்கம் வருவர் என்றும் அதேநேரம் அரசாங்கத்தில் இருந்து கொண்டே பலர் தமக்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஐக்கிய தேசியக் கட்சியின் 20 தொகுதி அமைப்பாளர்கள் அரசாங்கத்துடன் இணைந்துக்கொள்வர் என்று திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்

# கூட்டுறவு ஆணையாளரின் அனுமதியுடன் பொதுக்கூட்டம் விரைவில் நடாத்தப்படும்

## வலி.தென் மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் விளக்கம்

(சண்டிலிப்பாய்)

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி நடைபெறுமென 14 நாட்களுக்கு முன்னர் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் தொடர்மழை காரணமாக குறைந்த அங்கத்தவர்களே வருகை தந்திருந்தனர்.

இதனால் இந்தப் பொதுக் கூட்டத்தினை கூட்டுறவு ஆணையாளரின் அனுமதியுடன் மீண்டும் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்கத்தின் தலைவர், பொது முகாமையாளர், செயலாளர் ஆகியோர் இணைந்து அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நிர்வாகத்தின் கால எல்லை இன்னும் 2 வருடங்கள் உள்ள நிலையில் மேற்படி சங்கம் கலைக்கப்பட வேண்டிய எந்தவித தேவையும் எமக்கு இல்லை கடந்த ஆறு மாதமாக இக் கூட்டுறவுச் சங்கம் இலாபத்துடன் இயங்கி வருகிறது.

அதுமட்டுமன்றி கூட்டுறவு ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டே சங்கத்தில் நியமனங்கள் முறையாக வழங்கப்படுவதுடன் அந்த நியமனங்கள் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட பின்னரே ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களால் வெளிப்படையாக தெரியப்படுத்தப்பட்ட நிர்வாகக் குழுவினாலேயே இந்த நிர்வாகம் நடாத்தப்பட்டு வருவதுடன் சங்க விதிகள், உப விதிகளுக்கு அமைவாகவே சங்க செயற்பாடுகள் நடைபெறுவதுடன் நியமனங்களும், சம்பளங்களும் அவ்வாறே வழங்கப்பட்டுகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த காலத்தில் பொது முகாமையாளராக கடமையாற்றிய க.தனலிங்கத்தின் செயற்பாட்டால் கடந்த 2013 ஆம் ஆண்டு மட்டும் 5,40,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் அவர்கள் தமது செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## டெங்கு நோயை கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம்

யாழ்.மாவட்டத்தில் வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம் ஒன்று நாளை முதல் மூன்று தினங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என நேற்றுமுன்தினம் நடை பெற்ற விசேட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சுகாதார பரிசோதகர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது. இதன்படி நாளை முதல் மூன்று தினங்களுக்கு யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிவாரி பட்டப்பதிவுகள் செய்முறை பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு சங்கீதம், நடனம் செய்முறைப் பரீட்சைகளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடத்தவுள்ளது.

இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடத்தில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள கலை முதற்தேர்வு - 2011, பொதுக்கலைமாணித்தேர்வு - பகுதி - I, 2011, பொதுக் கலைமாணித்தேர்வு - பகுதி - II, 2011 ஆகிய கற்கை நெறிகளுக்குரிய பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியுமென பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். பரீட்சார்த்திகள் ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறும் செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகள் ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## நாமகள் வித்தியாலயத்திற்கு உதவி



(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் கனடா வாழ் யாழ்.எயிட் அனுசரணையாளர்கள் சார்பில கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியா லய மாணவர்களுக்கு வழங்கவென ஒருதொகுதி அப்பியாசக் கொப்பிகளும், கலிங்கம் சஞ்சிகை தொகுதியும் பாடசாலை முதல்வரிடம் யாழ்.எயிட் பணிப்பாளரினால் வழங்கப்பட்டன. (48)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு
18.12.2014

நாளைய தினமுரசு வாரமலரில்...




- தமிழ் மக்களை புறக்கணிக்கும் பொதுவேட்பாளர்
- ஆபத்தை நோக்கிய எதிர்காலம்!
- மதத்தின் பெயரால் அரசியல் நாடகம்
- சித்திரவதைகளும் மனித உரிமைகளும்

சர்வதேச விவகாரம்



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!


சரியான நேரம்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு



சுன்னாகம் பொலிஸாரின் ஏழாலை நடமாடும் பொலிஸ் நிலையத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டியின் இறுதிப்போட்டியில் பங்குபற்றிய ஏழாலை கலைமகள் விளையாட்டுக்கழகம் மற்றும் ஏழாலை நியு,வோறியர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப்பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் சமீர கருணாரட்ண மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் கோபிகிருஷ்ணா ஆகியோர் அணி வீரர்களுடன் காணப்படுகின்றனர்.

# தமிழக சிறுவன் தோல்வி



▲ கார்ல்சன்



▲ ராஜரிஷி கார்த்தி

செஸ்.கொம் நடாத்திய போட்டியில் உலக செஸ் சம்பியன் கார்ல்சனுடன் மோதிய தமிழகத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் ராஜரிஷி கார்த்தி தோல்வியடைந்தார்.

செஸ்.கொம்-மில் நடாத்தப்பட்ட போட்டியின் மூலம் 10 நபர்களுக்கு கார்ல்சனுடன் மோதும் வாய்ப்புக்கிடைத்தது. அவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த ராஜரிஷியும் ஒருவர். செஸ்.கொம் இணையத்தளத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கறுப்பு நிறக் காய்களுடன் ஆடிய ராஜரிஷி, 50ஆவது நகர்த்தலில் கார்ல்சனிடம் தோல்வியடைந்தார்.

# கழற்றி விடப்பட்டார் யுவராஜ்



எட்டாவது ஐ.பி.எல். தொடருக்கான தனது அணியில் இருந்து யுவராஜ் சிங்கை விடுவித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ். இதேபோன்று ஏனைய அணிகளும் சில வீரர்களை தங்கள் அணியிலிருந்து கழற்றி விட்டன. எட்டாவது ஐ.பி.எல். போட்டி அடுத்த ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி தொடக்கம் ஜூன் முதலாம திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் மோதும் அணிகள் தற்போதைய தங்கள் அணியில் வீரர்களை தக்க வைப்பதற்கான இறுதித்தினம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையாகும். நேற்று முன்தினம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் கடந்த ஏலத்தில் அதிக தொகை கொடுத்து - 14 கோடி இந்திய ரூபா - (இலங்கை மதிப்பில் சுமார் 33.6 கோடி) ரூபாவுக்கு வாங்கிய யுவராஜ் சிங்கை விடுவிப்பதாக அறிவித்தது. இதேபோன்று டில்லி டேர் டெவில்ஸ் அணி பார்த்தீவ் பட்டேல், தினேஸ் கார்த்திக், கெவின் பீற்றர்சன் ஆகியோரை கழற்றி விட்டது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி புஜாரா, பாலாஜி, முரளி கார்த்திக்கை விடுவித்தது.

# யாழ். பல்கலை விளையாட்டு முதலிடம் பிடித்தது கலைப்பீடம்


யாழ்ப்பாண பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டியில் கலைப்பீடம் 307 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்த விளையாட்டு போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகியதுடன் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இறுதி சுற்றுக்கள் இடம் பெற்றன.

307 புள்ளிகளைப் பெற்று கலைப்பீடம சம்பியனாகியதுடன், இரண்டாமிடத்தை 273 புள்ளிகள் பெற்று முகாமைத்துவ வணிக பீடமும், மூன்றாமிடத்தை 134 புள்ளிகள் பெற்று விஞ்ஞான பீடமும் பெற்றுக்கொண்டன.

ஓட்டப்போட்டிகளில், சிறந்த வீரனாக 100 மீற்றர் ஓட்டத்தூரத்தை 11.9 செக்கன்களில் ஓடி முடித்த வணிக முகாமைத்துவ பீட மாணவன் ஏ.கில்பேர்ட் றிவலும், சிறந்த வீராங்கனையாக 100 மீற்றர் ஓட்டத்தை 15.0 செக்கன்களில் ஓடி முடித்த கலைப்பீட மாணவி எஸ்.ஜெயரஞ்சினியும் தெரிவு செய்யப்பட்டனர்.

மைதான நிகழ்வுகளில் சிறந்த வீரனாக், நீளம் பாய்தல் போட்டியில் 5.93 மீற்றர் தூரம் பாய்ந்த முகாமைத்துவ வணிக பீடத்தை சேர்ந்த எஸ்.பத்மநிதர்சனும், சிறந்த வீராங்கனையாக நீளம் பாய்தலில் 4.11 மீற்றர் தூரம் பாய்ந்த கலைப்பீட மாணவி எஸ்.ஜெயரஞ்சினியும் தெரிவு செய்யப்பட்டனர்.



சிறந்த தடகள விளையாட்டு வீரனாக நீளம் பாய்தல் போட்டியில் 5.93 மீற்றர் தூரம் பாய்ந்த முகாமைத்துவ வணிக பீடத்தை சேர்ந்த எஸ்.பத்மநிதர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் வெற்றிபெற்ற பீடம் மற்றும் சிறந்த வீர, வீராங்கனைகளுக்கான வெற்றிக்கேடயங்களை வழங்கினார்.

# அடிலெய்ட் வாக்குவாதம் மூவருக்கு ஐ.சி.சி.அபராதம்



முதல் டெஸ்ட் போட்டியில் வாக்குவாதங்களில் ஈடுபட்ட ஹோலி, தவான், வோர்னர் ஆகிய மூவருக்கும் ஐசிசி அபராதம் விதித்துள்ளது.

அடிலெய்டில் நடந்த இந்தியா அவுஸ்ரேலியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளன்று வருண் ஆரோன பந்துவீச்சில் டேவிட் வோர்னர் விக்கெட்டை பறிகொடுத்தார். அப்போது ஆரோன் ஆக்ரோஷமாக துள்ளிக்குதித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஆனால் அந்தப் பந்து நோபோல் ஆனதால் வோர்னர் அவுட் ஆகவில்லை. இதைத் தொடர்ந்து ஆரோனைப் பார்த்து கமான் கமான் என்று வெறுப்பேற்றினார் வோர்னர். இதனால் தவானுக்கும் வோர்னருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ஹோலி தலையிட்டு வீரர்களை சமாதானப்படுத்தினார்.

பிறகு ஸ்மித்தின் எல்.பி.டபிள்யூ-வுக்காக நடுவரிடம் அவுட் கேட்டார் ரோஹித் சர்மா. அப்போது தேவையில்லாமல் ரோஹித் சர்மாவைப் பார்த்து ஸ்மித் ஏதோ கூற, அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பிறகு ஹோலியும் ஸ்மித்திடம் இது தொடர்பாக பேசினார். இந்த இரு சம்பவங்களைத் தொடர்ந்து ஹோலி, தவான், வோர்னர் ஆகிய மூவருக்கும் ஐசிசி அபராதம் விதித்துள்ளது. வோர்னர் ஆட்டத் தொகையிலிருந்து 15 சதவீதமும் ஹோலி, தவான் ஆகிய இருவரும் தலா 30 சதவீதமும் அபராதம் செலுத்தவேண்டும்.

# சிறந்த வெளிநாட்டு வீரராக தெரிவானார் றொனால்டோ



ரியல் மட்ரிட் கால்பந்து கிளப் அணியின் முன்னணி வீரரும் போர்த்துக்கல் அணி வீரருமான கிறிஸ்டியானோ றொனால்டோ உலகின் சிறந்த கால்பந்து வீரராக திகழ்ந்து வருகிறார்.

தற்போது இவருக்கு 2014ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை பி.பி.சி. வழங்கியுள்ளது.

இதுகுறித்து கிறிஸ்டியானோ றொனால்டோ கருத்து வெளியிடுகையில், என்னை சிறந்த வீரராக தேர்ந்தெடுத்ததற்கு பி.பி.சி.க்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய இங்கிலாந்தின் பழைய இரசிகர்களுக்கும் மிக்க நன்றி என்றார்.

றொனால்டோ ரியல் மட்ரிட் கிளப்பில் விளையாடுவதற்கு முன் இங்கிலாந்தின் மான்செஸ்டர் யுனைடெட் அணியில் விளையாடியவர்.

இவருடன் டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், குத்துச்சண்டை வீரர் பிளாய்ட் மேவெதர் மற்றும் கார்பந்தய வீரர் மார்க் மர்கியூஸ் ஆகியோர் போட்டியில் இருந்தனர். இவர்களை முந்திக்கொண்டு றொனால்டோ இந்த விருதை பெற்றுள்ளார்.

ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடும் 29 வயதான றொனால்டோ, 267 போட்டிகளில் 281 கோல்கள் அடித்துள்ளார். இந்த வருட சிறந்த கால்பந்து வீரர் என்ற விருதையும் பெற்றுள்ளார்.

# சிநேகபூர்வ கால்பந்து வென்றது யாழ். அணி



வல்வை பொது விளையாட்டரங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் சிநோக பூர்வ உதைப்பந்து போட்டிகள் நடைபெற்றன. இவ் உதைபந்தாட்டப் போட்டியில வல்வை ஏ.பி. அணியை எதிர்த்து யாழின் முன்னணி கழகங்களைச் சேர்ந்த சில வீரர்கள் கொண்ட அணி மோதியது.

முதலாவ்தாக நடைபெற்ற ஆட்டத்தில் வல்வை பி. அணியை எதிர்த்து யாழ்ப்பாண அணி மோதியது 8.4 என்ற கோல் கணக்கில் யாழ். அணி வெற்றிபெற்றது.

இரண்டவதாக நடைபெற்ற ஆட்டத்தில் வல்வை ஏ அணியை 15.1 என்ற கோல் கணக்கில் யாழ். அணிவெற்றிபெற்றது.

யாழ். அணி சார்பாக இலங்கை உதைபந்தாட்ட அணியில் உள்ள செல்வன் ஞானம் பங்கு பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# உரிய ஆவணங்கள் இருந்தும் புறக்கணிக்கப்படும் வீட்டுத்திட்டம்

## கரைச்சி பிரதேச மக்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டப்பணிகள் 80 வீதம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் இவ்வீட்டுத் திட்டத்தில் ஆவணங்கள் இருந்தும் ஒருசில மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் வீட்டுத் திட்டம் கிடைக்காத பயனாளிகள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர். குறிப்பாக இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியை அண்டிய கிராமங்களிலுள்ள பயனாளிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இம்மாவட்டத்தில் உள்ள மக்கள் யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டதுடன் பல மக்கள் வீடுகளை இழந்த நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தனர் இந்நிலையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் இந்திய வீட்டுத்திட்டம்,அரச சார்பற்ற நிறுவனங்களின் வீட்டுத் திட்டம் என வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டன.


இதில் இந்திய வீட்டுத்திட்டமே௸வறுமைக்கோட்டிற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட நிலையில் இத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்டது. இதில் வீட்டுத்திட்டத்திற்கமைய உரிய ஆவணங்கள் இருந்தும் தெளிவற்ற காரணங்கள் கூறப்பட்டு தமக்கான வீட்டுத் திட்டம் புறக்கணிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த வீட்டுத்திட்டத்தைப்பெறவேண்டும் என தாம் ஆவணங்களுடன் பல இடங்களிற்கு அலைந்து திரிந்தும் கடைசிநேரத்தில் கைவிரிக்கும் செயற்பாடாகவே உள்ளதாகவும் இது பாரபட்சம் காட்டும் நடவடிக்கை எனவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வாழ்வாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் எமக்கு வீட்டுத்திட்டம் வரப்பிரசாதம் என எதிர்பார்த்த நிலையில் இவ்வாறு தாம் புறக்கணிக்கப்படுவது நியாயமற்ற செயற்பாடு எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அடுத்த வருடத்திலாவது வறுமையின் கீழ் வாழும் எமக்கு இந்திய வீட்டுத்திட்டமோ அல்லது அரச சார்பற்ற வீட்டுத்திட்டமோ வழங்குவதற்கு அரச அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (77)

# நோர்வே விஜேந்திரனின் கவிதை நூல் வெளியீடு



நோர்வே விஜேந்திரனின் கவிதை நூல் மற்றும் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு வவுனியா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதிவிநாயகர் பாலாம்பிகை கலாசார மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு தமிழருவி சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவனும் தற்போது நோர்வேயில் வசித்து வருபவருமான விஜேந்திரனின் கவிதை நூல் மற்றும் இறுவட்டு என்பன வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் முன்னாள் வவுனியா நகர சபையின் தவிசாளருமான எஸ்.என்.ஜி.நாதன், வவுனியா நகரசபையின் முன்னாள் உப தவிசாளர் க.சந்திரகுலசிங்கம் (மோகன்), துணுக்காய் உதவி பிரதேச செயலாளர் குணபாலன், சட்டத்தரணி தயாபரன், லயன் பாலேந்திரன், கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரி இயக்குநர், செந்தணல் வெளியீட்டக நிர்வாகிகள், சமய ஆர்வலர் தேவராஜா, வட மாகாண மீன்பிடித் துறை அமைச்சின் இணைப்பாளர் செந்தில்நாதன் மயூரன்,சமூக ஆர்வலர் செந்தில், ஊடகவியலாளர் சந்திரபத்மன் பாபு, வெகுஜன அமைப்பாளர் பிரதீபன் என பல சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (70)

# மின்சார சபையின் செயற்பாடு பாராட்டினர் பொதுமக்கள்

நெல்லியடி மகாத்மா வீதிப் பகுதியில் அறுந்து விழும் ஆபத்தான நிலையிலிருந்த மின்சார இணைப்பு கம்பியை பருத்தித்துறை மின்சார சபை ஊழியர்கள் உடனடியாக சீர்செய்து ஆபத்தை தடுத்து நிறுத்தியமை குறித்து பொது மக்கள் பாராட்டியுள்ளனர்.

குறித்த பகுதியில் மின்சார இணைப்புக்கம்பி அறுந்து விழும் நிலையில் காணப்பட்டது. இதனை அவதானித்த நெல்லியடி வணிகர் கழக உபதலைவர் சி.அகிலதாஸ் பொதுமக்களுக்கு இதனால் ஏற்படும் ஆபத்தை கருத்தில் கொண்டு உடனடியாக பருத்தித்துறை மின்சார சபை அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

உடனடியாக செயற்படும் வகையில் அத்தியட்சகரின் பணிப்பிற்கமைய மின்சார சபை ஊழியர்கள் குறித்த இடத்திற்கு விரைந்து வந்து மின்சார கம்பியை மாற்றி அவற்றை சீர் செய்தனர்.

பொதுமக்களுக்கு ஏற்படவிருந்த ஆபத்தை தடுத்து பருத்தித்துறை மின்சார சபை உடனடியாக செயற்பட்டமை குறித்து பொதுமக்கள் பாராட்டியுள்ளதுடன் தமது நன்றியையும் தெரிவித்துள்ளனர். (18)



பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா, முழங்காவில் பகுதி வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக அண்மையில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது... (36)

# ஜீவனத்திற்காக வழங்கப்பட்ட மாடுகள் கட்டாக்காலிகளாக திரியும் நிலை

ஏ-9 வீதியை அண்டிய வீதிப்பகுதிகளில் வாழ்வாதாரத் திற்காக மக்களுக்கு வழங்கப்படும் மாடுகள் கட்டாக்கலிகளாக வீதியில் விடப்படுவதால் வீதியால் செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வீதிகளை வாழ்விடமாக்கும் மாடுகள் இரவு வேளைகளில் வீதியில் படுத்துறங்குவதால் வாகனங்கள் அவற்றுடன மோதுண்டு விபத்துக்குள்ளாகும் அவலநிலையும் ஏற்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதேச மட்ட அமைப்புக்கள் மூலம் மாடுகள் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட நிலையில் அவற்றை சரியாக பராமரிக்காது கட்டாக்காலிகளாக திரிய விடுவதால் பாதிப்பு பயணிகளுக்கே என தெரிவிக்கும் மக்கள் மாட்டை பெற்றுக்கொண்டவர்கள் மாடுகளை கட்டி வளர்க்க வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இப்பிரதேசத்தில் இரவு வேளையில் வாகனம் ஒன்று மாட்டுடன் மோதி ஒரு வீட்டின் முன்கதவை உடைத்துள்ளதாக தெரிவிக்கும் மக்கள் கட்டாக்காலிகளாக திரியும் மாடுகளால் விபத்துக்கள் இவ்வாறு நிகழ்வதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். (77)

# பாடசாலை அருகில் குப்பைகள் டெங்கு நோய் ஏற்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரிக்கருகில் கே.கே.எஸ் வீதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் சுகாதாரத்திற்கு பாதகமான நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக அகற்றப்படாத இக் குப்பைகளால் நாளாந்தம் பல்வேறு சுகாதாரப் பிரச்சனைகள் எழுந்துள்ளதோடு பிரதானவீதியில் குப்பை மேடொன்றும் உருவாகி வருகின்றது.

இக் குப்பைகள் அகற்றப்படாமையால் மீளவும் வீதியால் செல்பவர்கள் இவ்விடத்தில் தொடர்ந்தும் குப்பைகளை கொட்டி வருகின்றனர்.

இதற்கருகில் பாடசாலை வர்த்தக நிலையங்கள், வீடுகள், தனியார் கல்விநிலையங்கள் என்பன காணப்படுவதால் பல்வேறு சுகாதாரசீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மரக்கறிக் கழிவுகள் வாழைக்



குற்றிகள், போத்தல்கள் என்பனவும் தொடர்ந்து போடப்படுவதால் நுளம்பு பெருகக்கூடிய சூழல் எழுந்துள்ளதுடன் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இவ்வீதிப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றது இப்பகுதியில்குப்பை கொட்டுவோர் சிந்தித்து செயற்படவேண்டும் எனவும் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (48)

## முன்பள்ளி சிறார் கௌரவிப்பு

(முழங்காவில்)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் காசிம் முன்பள்ளியின சிறுவர்ஒளிவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக் கிழமை முன்பள்ளி பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிறிஸ்து வசன சபை போதகர் ஆ. ராஜ்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு முன்பள்ளி சிறார்களுக்கு உபகரணங்களை வழங்கி கௌரவித்தார் தொடர்ந்து சிறார்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (36)

# ஆசிரியர்களுக்கான ஆங்கில பாடநெறி

(யாழ்ப்பாணம்)


கொழும்பு பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு நிறுவகம் ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி ஒன்றினை நடாத்தவுள்ளது தொழில்ரீதியான ஆங்கில உரையாடல் பயிற்சி, வாசித்தலும் புரிந்துகொள்ளலும், எழுத்து, மற்றும் கட்டுரை, ஆரம்ப ஆங்கில இலக்கணம், பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற பொது ஆரம்பப் பாடங்களின் பொதுவசனங்கள் மற்றும் அவற்றின் பாவனை போன்ற விடயங்கள் இக்கற்கைநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரச அல்லது பதிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம் பாடநெறிக்காலம் 28 வாரங்கள் (வாரம் 3 மணிநேரம் சனி, ஞாயிறு தினங்களில்) பாடநெறிக்கட்டணம் 8000ரூபா விண்ணப்பப்படிவங்களை www.ihrn.cmb.ac.lk இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி அடுத்த மாதம் 14ஆம் திகதி புதன்கிழமையாகும். (10)

# சி.ஐ.ஏயின் சித்திரவதை நடவடிக்கை செனட் சபை அறிக்கையில் அம்பலம்

## அமெ. அதிகாரிகள் மீது வழக்கு தொடுக்க ஐ.நா. கோரிக்கை

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. மேற்கொண்ட புலனாய்வு விசாரணை முறைகள்



நம்பப்பட்டதை விடவும் கொடூரமாக இருந்தமை அமெரிக்க செனட் சபை வெளியிட்ட அறிக்கை மூலம் அம்பலமாகியுள்ளது. சர்ச்சைக்குரிய இந்த விசாரணை முறைகள் கொடுமையானது மற்றும் திறனற்றது என்று விமர்சித்திருக்கும் செனட் சபை இவ்வாறான முறைகளை கையாண்டதற்கு சி.ஐ.ஏவை கடுமையாக சாடியுள்ளது.

செப்ரெம்பர் 11 இரட்டை கோபுர தாக்குதலுக்கு பின்னர் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் கீழ் சி.ஐ.ஏ. மேற்கொண்ட புலனாய்வு விசாரணைகள் குறித்த அறிக்கையையே செனட் சபை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.

6,700 பக்கங்கள் கொண்ட முழு விசாரணை அறிக்கையில் 500 பக்கங்கள் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சிய பக்கங்கள் தொடர்ந்தும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. இதில் 2001 முதல் 2009 காலத்தில் தீவிரவாத குற்றச்சாட்டுக்கு உள்ளான சுமார் 100 பேர் நடத்தப்பட்ட விதம் குறித்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

சி.ஐ.ஏ. விசாரணை முறைகளின்படி, தீவிரவாத சந்தே நபர்கள் 180 மணிநேரம் தொடர்ந்து விழித்திருக்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். கைதிகள் அவமானப்படுத்தப்பட்டனர், அடிக்கப்பட்டனர். வலிதரக்கூடிய வகையில் உட்காரும்படி பணிக்கப்பட்டனர். இந்த திட்டத்தை சி.ஐ.ஏ. முறையாக செயல்படுத்தவில்லை என்றும் இது தொடர்பாக மக்களுக்கு அது தவறான விபரங்களைத் தந்ததாகவும் செனட் உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பலஸ்தீன பூர்வீகம் கொண்ட சவுவுதி நாட்டவரான 43 வயது அபூ சுபைதாஹ் தற்போது குவன்தனாமோ பே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் 2002 ஆம் ஆண்டு சூட்டுக் காயத்துடன் பாகிஸ்தானில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சுபைதாஹ் 2002 ஆகஸ்ட் மாதம் 20 நாட்கள் கொடூரமான முறையில் புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது கைதியின் முகத்தை துணியால் மறைத்து அதன் மீது தண்ணீரை ஊற்றி சித்திரவதை செய்யும் வோட்டர் போடிங் முறையை சுபைதாஹ் மீது நாளாந்தம் இரண்டு முதல் நான்கு தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது" என்று செனட் சபை அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்த காலப்பிரிவில் சுபைதாஹ் 266 மணி நேரம் சவப்பெட்டி ஒன்றுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்துள்ளார். சுபைதாஹ் மீதான முதல் நாள் புலன் விசாரணையில் அவர், சங்கிலியால் பிணைக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, சுவரில் மோதவிடப்பட்டுள்ளார்.

"சுபைதாஹ் மேலதிக தகவல்களை கொடுக்க மறுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் அவரது முகத்தில் அறையப்பட்டோ அல்லது முகத்தை நெருக்கியோ கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யெமன் நாட்டவரான 42 வயது ரம்ஸி பினல்ப் செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு அடுத்த தினம் பாகிஸ்தானில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். குவன்தனாமோ பே சிறையில் இருக்கும் அவர் மீதான வழக்கு விசாரணை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டது.


சி.ஐ.ஏ. தலைமையகத்தில் இடம்பெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளுக்கு பின்னர் ஒத்துழைப்பு வழங்கி இருப்பதாகவும், எனினும் 2003இல் சுமார் மூன்று தினங்கள் அவர் தூங்க விடாமல் தடுக்கப்பட்டிருப்பதோடு, நிர்வாணமாக்கப் பட்டு வைக்கப்பட்டுள்ளார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் மூளையாக செயற்பட்டவர் என சந்தேகிக்கப்படும் 49 அல்லது 50 வயதான காலித் முஹமது 2003 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் வைத்து பிடிபட்டார்.

செனட் அறிக்கையில் கே.எஸ்.எம். என அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் இவர் மீதான புலன்

---

# கே.வி. மகாதேவன்



**42**

**- பி.ஜி.எஸ்.மணியன் -**

எம்.ஜி.ஆர். அதிர்ந்து நிற்கும் அளவுக்கு சின்னப்பா தேவர் சொன்னது இதுதான்:

"முருகா, இந்தப் பாட்டுக்கான சீன் ஒரு கனவு சீன். அம்முவுக்கு (ஜெயலலிதா) மட்டும் தான் டான்ஸ். நீங்க முருகக் கடவுளா கையிலே வேலை வச்சுக்கிட்டு நிக்கணும். அவ்வளவுதான்."

ஆரம்ப காலங்களில் காங்கிரஸ் பேரியக்கத்தொடு தொடர்பு கொண்டிருந்த வேளையில் கழுத்தில் ருத்திராட்சம் அணிந்து நெற்றியில் சந்தனப் பொட்டு வைத்துக்கொண்டு இருந்தவர்தான் எம்.ஜி.ஆர்.

ஆனால் பெரியாரோடும், அண்ணாவோடும் ஏற்பட்ட நட்பின் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டபிறகு கடவுள் மறுப்புக் கொள்கை அதன் கொள்கைக் கோட்பாடுகளில் ஒன்று என்று ஆனபிறகு தன் படங்களில் கடவுள் சம்பந்தப்பட்ட காட்சிகளையோ வேடங்களையோ ஏற்பதைத் தவிர்த்துவந்தார் அவர்.

அப்படிப்பட்டவர் முருகன் வேடத்தில் தோன்றுவது என்றால்...

கட்சி ஏற்றுக்கொள்ளுமா?

ஏற்கனவே திருப்பதிக்கு சென்று வந்த காரணத்தால் சிவாஜிகணேசனுக்கு ஏற்பட்ட அவமானங்களின் காரணமாக அவர் தி.மு.கவை விட்டே வெளியேறினாரே!

அதுவும் இப்போது கட்சியில் தனக்கு பெரிய முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது. அடுத்த வருடம் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் பரங்கிமலைத் தொகுதியின் வேட்பாளராக தன்னை நிறுத்தும் முடிவில் பேரறிஞர் அண்ணா இருக்கிறார்.

இந்த சமயத்தில் இப்படி ஒரு வேடமா? ஒரு காட்சியில் தான் என்றாலும் தான் எப்படி கடவுள் வேடத்தில் தோன்ற முடியும்?

தன் ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

தயங்கினார் எம்.ஜி.ஆர்.

ஆனால் தேவர் விடுவதாக இல்லை.

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. ஜனங்க கண்டிப்பா ஏத்துக்குவாங்க" - என்று ஒரே போடாக போட்டு அவரை முருகன் வேடத்தில் தோன்றவும் வைத்துவிட்டார் தேவர்.

அந்தப் படம்தான் "தனிப் பிறவி".

"எதிர் பாராமல் நடந்ததடி. முகம் கண்ணுக்குள் தெரிந்ததடி" - என்ற பி.சுசீலாவின் பாடலுக்கு மகாதேவன் அமைத்த மெட்டும் கவிஞரின் வரிகளும் அந்தப் பாடல் காட்சியில் முருகனாக எம்.ஜி.ஆர். தோன்றிய காட்சியும் பாடலுக்கு ஒரு தனி மதிப்பைக் கொடுத்துவிட்டன.

எம்.ஜி.ஆர். நினைத்துப் பயந்ததற்கு நேர்மாறாக அவரது ரசிகர்கள் அந்தப் பாடல் காட்சியை வெகுவாக ஆரவாரத்துடன் வரவேற்று ரசிக்கவே செய்தார்கள்.

தனிப் பிறவி - பாடல்கள் அனைத்துமே ஹிட் பாடல்களாயின.

"உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே" - இன்றளவும் மே தினக் கொண்டாட்டங்களில் தவறாமல் நம் காதுகளை நிறைக்கின்றனவே.

"சிரிப்பென்ன சிரிப்பென்ன சின்னம்மா" - பி. சுசீலா.

"ஒரே முறைதான் உன்னோடு பேசிப்பார்த்தேன்" - டி.எம்.எஸ். - பி.சுசீலா.

"நேரம் நல்ல நேரம்", "கன்னத்தில் என்னடி காயம்" - ஆகிய டூயட் பாடல்களும் இனிமை ரகத்தை சேர்ந்தவை.

ஆனால்.. பாடல்கள் வெற்றி பெற்ற அளவுக்கு தனிப்பிறவி பெரிதாக ஒன்றும் சாதிக்கவில்லை. சுமாரான ஓட்டத்தையே சந்தித்தது.

ஒளிப்பதிவாளரும் தயாரிப்பாளருமான




ஆர்.ஆர். சந்திரன் தயாரித்து இயக்கிய படம்தான் "மகாகவி காளிதாஸ்".

சிவாஜிகணேசன், சௌகார் ஜானகி, கே.பி. சுந்தராம்பாள். முத்துராமன், ஜி. சகுந்தலா, எல். விஜயலட்சுமி நடித்திருந்தனர். பாடல்களை கவியரசரும், கு.மா. பாலசுப்பிரமணியமும் எழுதினர்.

இன்றளவும் படத்தின் பெயர் சொன்னால் போதும் உடனே நினைவுக்கு வரும் பாடல் "யார் தருவார் இந்த அரியாசனம்" - மூடனாக இருந்த காளிதாசன் தேவியின் அருளால் கவிபாடும் வன்மை பெற்றதும் அதை நினைந்து நெக்குருகி பாடும் பாடல். டி.எம். சௌந்தரராஜனின் குரலில் தொனிக்கும் பெருமிதமும், கம்பீரமும் பாடலுக்கு தனி உயர்வைக் கொடுத்துவிடுகிறது. அடாணா ராகம்தான் மன உணர்வுகளை எப்படி எல்லாம் தூண்டி விடுகிறது!

இன்றைக்கும் கூட "அடாணா" ராகத்தில் இடம்பெற்ற ஒரு சினிமாப் பாடலைச் சொல்லும்படி யாரிடமாவது கேட்டோமானால் அவர் பளிச்சென்று சொல்லும் பாட்டு இதுவாகத்தான் இருக்கும். அந்த அளவுக்கு இந்த ராகத்தை அழுத்தம்திருத்தமாகக் கையாண்டிருக்கிறார் கே.வி. மகாதேவன்.

"மலரும் வான் நிலவும்" - கு.மா. பாலசுப்ரமணித்தின் இந்தப் பாடல் படத்தில் இரண்டு முறை வருகிறது. டி.எம்.எஸ் குரலில் ஒருமுறையும், பி.சுசீலாவின் குரலில் ஒருமுறையும்.

இரண்டிலும் தான் எத்தனை மாறுபாடு. டி.எம்.எஸ் பாடும்போது இயற்கை அழகை வியக்கும் ஒரு கவிஞனின் மனநிலை கண்முன் வந்து நிற்கிறது. பி.சுசீலாவின் குரலில் ஒலிக்கும்போது சரண வரிகளே வேறுபடுவதால் தலைவனை விட்டுப் பிரிந்திருக்கும் தலைவியின் தாபமும் ஏக்கமும் பிரதிபலிக்கின்றன.

கே.பி.சுந்தராம்பாள் பாடியிருக்கும் "சென்று வா மகனே சென்று வா" பாடலும்,

"காலத்தில் அழியாத காவியம் தரவந்த மாபெரும் கவிமன்னனே" - பாடலும் இன்றளவும் காலங்களைக் கடந்து நிலைத்து நிற்கின்றன.

"குழந்தையின் கோடுகள் ஓவியமா" - என்று விருத்தமாகத் தொடங்கி "கலைமகள் எனக்கொரு ஆணையிட்டாள்." - என்று மகாகவி காளிதாசனின் காவியங்களான மேகசந்தேசம், குமார சம்பவம், சாகுந்தலம் ஆகியவை பிறப்பதை அழகாக எடுத்துரைக்கும் பாடல்.

டி.எம்.எஸ். - பி. சுசீலாவின் குரல்களில் ஒரு அருமையான ராகமாலிகையாக அமைத்து செவிகளையும் மனதையும் நிறைத்திருக்கிறார் கே.வி.மகாதேவன்.

ஆனால்..

பாடல்கள் வெற்றி பெற்ற அளவுக்கு படம் வெற்றிபெறவில்லை என்பதை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

(தொடரும்)

விசாரணையின்போது, முகம் மற்றும் வயிற்றுப் பகுதிகளில் கடுமையாக தாக்கப்பட்டிருப்பதோடு முகத்தை நெருக்கி சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளார். இவர் தனது கைகளை உயர்த்தி வைத்தபடி தூக்கமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். அதேபோன்று நிர்வாணமாக் கப்பட்டும், தண்ணீரில் ஊறவைக்கப்பட்டுமுள்ளார்.

இதன்போது மல வழி நீரேற்றப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டபோது இருவர் பற்றி போலியான தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த இருவரையும் சி.ஐ.ஏ. கைதுசெய்து விசாரித்தபோது அவர்கள் நிரபராதிகள் என்று கண்டறியப் பட்டுள்ளது.

2003 மார்ச் மாதத்தில் முஹமத் இரண்டு வாரங்களுக்கு 15 தடவைகள் வோட்டர் போடிங் முறையில் சித்திரவதை செய்யப்பட் டிருக்கிறார். அதேபோன்று அவர் ஏழரை நாட்கள் தூக்கமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். சி.ஐ.ஏ கையாண்ட மூர்க்கமான விசாரணை முறைகளை அனுமதித்த அமெரிக்க அதிகாரிகள் மீது வழக்கு தொடுக்கப்படவேண்டும் என்று ஐ.நா. மன்றமும், மனித உரிமைக் குழுக்களும் கோரியுள்ளன.

# ஒரு விடாக்கண்டன், கொடாக்கண்டன் கதை

ஒரு குருவிடம், "வழக்காடுதல்" கற்றுக் கொள்ளச் சென்றான் ஒரு இளைஞன். அவனை சிறந்த வழக்கறிஞராக்கு வதாக உறுதியளித்து, அதற்கு தட்சணையாக, ஒரு பெரும் தொகை கேட்டார் குரு.

அந்த இளைஞன், பாதி தொகையை அப்போதே தந்து விடுவதாகவும், மீதி தொகையை தான் எடுத்துக் கொள்ளும், முதல் வழக்கில் ஜெயித்தால் மட்டுமே தர முடியும் என்றான்.

தன் மாணவன் நிச்சயம் ஜெயிப்பான் என்ற நம்பிக்கையில், குருவும் அதற்கு ஒப்புக் கொண்டார். அதன்படியே ஒரு ஒப்பந்தமும் எழுதி, இருவரும் கையெழுத்திட்டனர்.

இளைஞன் அங்கேயே தங்கி கல்வி கற்றான்; கல்வி முடிந்ததும் குருவிடம் விடைபெற்று சென்று விட்டான்.

இரண்டு, மூன்று மாதமாகியும், அவனிடம் இருந்து எந்த பணமும் வராததால், குருவே அவனைத் தேடிச் சென்றார். அவனோ, தான் இதுவரை எந்த வழக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றும், அதனால், ஒப்பந்தப்படி இப்போது பணம் தர முடியாது என்று சொல்லி விட்டான்.

எப்போது கேட்டாலும், அவன் இதையே சொல்வதால் பொறுமை இழந்த குரு, "இந்த இளைஞன் எனக்குத் தருவதாக சொன்ன தொகையை தராமல் ஏமாற்றுகிறான்..." என்று, அவன் மீது ஒரு வழக்கு தொடர்ந்தார்.

அந்த இளைஞன் சந்தித்த முதல் வழக்கு இதுதான்.

"குருவுக்கு இவன் பணம் தர வேண்டும்..." என்று நீதிபதி தீர்ப்பளித்தால், முதல் வழக்கில் சிஷ்யன் தோற்றவனாகிறான். அதனால், ஒப்பந்தப்படி பணம் தர வேண்டியதில்லை. "பணம் தர வேண்டாம்..." என்று தீர்ப்பு வந்தால், தீர்ப்புப்படி சிஷ்யன் பணம் தர வேண்டியதில்லை. எப்படிப் பார்த்தாலும் இவன் பணம் தர வேண்டியதில்லை - இது இளைஞன் தரப்பு வாதம்.

"பணம் தர வேண்டும்" என்று தீர்ப்பு வந்தால், தீர்ப்புப்படி சிஷ்யன் பணம் தர வேண்டும். "பணம் தர வேண்டாம்" என்று தீர்ப்பு வந்தால், இவன் வழக்கில் ஜெயித்தவனாகிறான். எனவே, ஒப்பந்தப்படி பணம் தர வேண்டும். எப்படிப் பார்த்தாலும் சிஷ்யன் பணம் தர வேண்டும். - இது குரு தரப்பு வாதம்.

எத்தனை கோடி குழப்பம் வைத்தாய் இறைவா!



# கஞ்சாவை வரவேற்கும் நாடு!

"ஒருவர் இரண்டு அவுன்ஸ் கஞ்சா வைத்திருந்தால், அது குற்றம் ஆகாது; மத நிகழ்ச்சிகளுக்கும், மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும், "மரிஜுவான" போன்ற போதைப் பொருட்கள் பயன் படுத்துவதும் குற்றமல்ல..." என, ஜமைக்கா நாடு அறிவித்துள்ளது. "1913ம் ஆண்டு, முதல், கஞ்சா பயிர் வளர்ப்பதும், பயன்படுத்துவதும் குற்றம்..." என்று ஜமைக்கா அரசு அறிவித்திருந்த போதும், பொலிஸ் கண்டு கொள்ளாததுடன், கஞ்சா வழக்குகளையும் பதிவு செய்வதில்லை. கஞ்சா உல்லாச சுதந்திரத்தை விரும்புவோர் அங்கு கூடுதலாகவும் உள்ளனர். இதனால், தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஜமைக்கா அரசு கஞ்சா விஷயத்தில் கண்டிப்பை தளர்த்தியுள்ளது.



# எச்சரிக்கை சாமியார்கள்....



பிரச்சினைகளிலிருந்தும், வாழ்வில் எதிர் கொள்ளும் விடை தெரியாக் கேள்விகளி லிருந்தும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள எந்த மகான்களிடம் இம் மக்கள் சரணடைந்தனரோ, அந்த மகான்களையே அவர்கள் காப்பாற்றப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படியும் காப்பாற்ற இயலாமல் அவர்கள் கம்பி எண்ணிக் கொண்டும், "பெயில்" கிடைக்குமா என வேண்டிக் கொண்டும் இருக்க நேர்ந்த போதும் கூட எப்படி இந்த ஊர் இன்னும் இவர்களை நம்பிக் கொண்டிருக்கிறது?

எப்படி இன்னும் இத்தகைய அவதார சாமிகளின் எண்ணிக்கை இங்கு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது?

வழமையான இறை நம்பிக்கை (belief) என்பதைத் தாண்டி அற்புதங்களை(miracles) நாடும் வேட்கை அதிகரித்து வருவது மட்டும் நமக்குப் புரிகிறது.

பொருள்முதல்வாதத் தத்துவங்கள், மூட நம்பிக்கை எதிர்ப்புப் பிரசாரங்கள், அறிவியல் உண்மைகள் எல்லாம் தோற்றுக் கொண்டு இருக்கின்றனவா?

பூமி உருண்டை எனவும், இரவு பகல், பருவச் சுழற்சி முதலியன எப்படி ஏற்படுகின்றன எனவும் விளக்குதல் மட்டும் போதாதா?

மழை எப்படிப் பெய்கிறது, நீர் எப்படி ஆவி ஆகிறது, பனிக்கட்டியாய் உருவம் எடுக்கிறது என்கிற கேள்வி களுக்கு விடை கிடைத்தால் மட்டும் மனித மனம் திருப்தி அடைவதில்லை. அதற்கும் மேலாகச் சில வாழ்வியல் கேள்விகளுக்கு அதற்கு விடை தேவைப்படுகிறது.

நான் எத்தனை நல்லவனாக இருந்த போதிலும் ஏன் எனக்கு இந்தச் சோதனைகள்? இத்தனை அநீதிகளையும் செய்பவன் எப்படி எந்தச் சறுக்கலும் இல்லாமல் மேலே-றிக் கொண்டுள்ளான்? இப்படியான கேள்விகளுக்கு விஞ்ஞானத்தால் பதில் சொல்ல இயலவில்லையே?

பிணி, மூப்பு, சாக்காட்டிலிருந்து தப்புவதற்கு புத்தர் சொன்னவழி திருப்தி அளிக்கவில்லையே. பணம் உள்ளவர்களின் சராசரி ஆயுளும் நோய் எதிர்ப்பு சக்தியும் ஏழை எளியவர்களுக்கு இல்லையே.

மார்க்சீயம் முதலிய புரட்சிகரத் தத்துவங்கள் அளித்த பதில்களும் நடைமுறையில் நிறுவப்பட்டு மக்களின் கைகளில் பலன்களாக விடியவில்லை. முதலாளியத்திற்குப் பின் அப்படி ஒன்றும் சோசலிசம் உருப்பெற்று விடவில்லை. உருப்பெற்றவையும் வெற்றி பெறவில்லை. என்ன நடந்தது எனக் கம்யூனிஸ்டுகள் விளங்கிக் கொள்ளவும் இல்லை; விளக்கவும் இல்லை; தங்களை மாற்றிக் கொள்ளவும் தயாரர்க இல்லை.

மாற்றாக உருவான அடித்தள மக்கள் இயக்கங்களும் பேசியவை எல்லாம் வெறும் வாய் வீச்சுக்களாகவே முடிந்தன. கட்டப் பஞ்சாயத்துகளுக்கும், சாதி அடையாளத்தைக் காட்டி வாரிசு அரசியல் செய்வதற்குத்தான் இட்டுச் சென்றன. சாதிஅமைப்பில் இடையி லும் கீழும் உள்ளவர்கள் தங்கள் இழி நிலைகளை மேம்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் வெறும் புனைவு அளைவி லேயே நின்றன. சாதிப் பெருமை பற்றிய புனைவு வரலாறுகளை உருவாக்குதல், ஆண்ட பரம்பரை எனச் சொல்லிக் கொள்ளுதல், சாதித் திரு உருக்களை உருவாக்குதல் என்பதாக அமைந்தன.

அறிவுஜீவிகள் இவ்வாறு உருவாகும் நிலையை விளக்குவதோடு நில்லாமல் இதைக் கொண்டாடி இதுவே போதும் என அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தங்களை வளப்படுத்திக் கொண்டனர்.

எல்லோரும் கைவிட்டார்கள் என்கிறபோது இந்த "எல்லோரிலும்" என்பதில் அரசியல் இயக்கங்கள் தவிர கடவுளரும் அடக்கமாகிறார்கள் போலும். இல்லா விட்டால் ஆலய வழிபாடுகளுக்கு அப்பால் எப்படி இந்த அவதார மனிதர்களின் வழிபாடுகள் இடம்பெற்றன?

கடவுளர் கைவிட்ட இடங்களை பொருள்முதல்வாதிகளோ இல்லை பகுத்தறிவாளர்களோ இல்லை அடை யாள அரசியலாரோ யாராலும் நிரப்ப இயலவில்லை.

தம்மிடம் வருபவர்களை இந்த அவதார மனிதர்கள் தக்க வைக்கும் உத்திகள் குறித்து உளவியலாளர்களின் கருத்துக்களைத் தொகுத்துப் பலரும் எழுதியுள்ளனர். வருகிறவர்களின் சுயசிந்தனையையும் சுயத்தையும் அழித்தல் இவர்களின் முதல் உத்தி.

நித்தியானந்தா, "மனம் ஒரு குரங்கு. அதை அலைய விடாதீர்கள். உங்கள் மனதில் படிந்து கிடக்கும் அய்யங்களைத் துடைத்தெறிந்து குரு சொல்வதைக் கேளுங்கள்.." எனச் சொல்வதை அவரது பக்தை ஒருவர் பதிவு செய்துள்ளார்.

சமூகம் பதித்துள்ள மூட நம்பிக்கைகளை நீக்கிய "நிர்வாண சிந்தனாமுறை"தான் புதியதைக் கற்க உதவும் என்றார் பெரியார். "எல்லாவற்றையும் சந்தேகி" என்றார் மார்க்ஸ். இந்தச் சாமியார்களோ சமூகமும், பகுத்தறிவும் உருவாக்கி யுள்ள நியாயமான அய்யங்களைத் துறக்கச் சொல்கின்றனர். பெரியாரும் மார்க்சும் சுய சிந்தனையை வற்புறுத்தினர். இவர்களோ சுயத்தை அழித்து வணங்கும் குருவிடம் ஐக்கியமாகச் சொல்கின்றனர்.

பாவங்களில் எல்லாம் பெரியது "குருத் துரோகம்தான்" என இவர்கள் அறிவுறுத்துகின்றனர், தொடக்க நிலைப் பக்தர்களை ஒரு நாளில் சுமார் 20 மணிநேரம் ஏதேனும் பயிற்சிகளில் ஈடுபடுத்திப் படுத்தவுடன் எதையும் சிந்திக்காமல் உறங்க வைக்கும் உத்தியைச்சுட்டிக் காட்டுகிறார் இன்னொரு ஆய்வாளர். குருவை முழுமையாக நம்பி ஏற்றுக் கொண்டவர்களுக்குப் புதிய பெயர் ஒன்றைச் சூட்டுவது இன்னொரு உத்தி. இதன் மூலம் அவர்கள் தம் பழைய வாழ்வையும் அடையாளங்களையும் துறந்து குருவில் ஐக்கியமாகின்றனர்.

தங்களின் சுயத்தை இழந்து குருவிடம் ஐக்கியமானவர்கள் அவர் மீது குற்றாச்சாட்டுகள் வைக்கப்படும்போது அவற்றை நம்புவதில்லை. அவர் குற்றமிழைத்தார் அல்லது தோல்வியடைந்தார் என ஏற்பது அவர்கள் தங்களையே இழப்பதற்கொப்பு. தாங்களே வீழ்ந்ததற்கொப்பு. அதன் விளைவுதான் அவர்கள் இப்படிப் பைத்தியமாக அவர்களை நம்பி உயிரையும் கொடுக்கத் துணிவது என்கிறார் இன்னொரு ஆய்வாளர்.


எப்படியோ இந்தத் தகவல் தொழில் நுட்ப உலகமய யுகத்தில் விஞ்ஞான உண்மைகளுக்கு ஒரு சவாலாக இந்தச் சாமியார்கள் தங்களுக்கும் ஒரு இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இது ஆபத்தானது என உணர்பவர்களுக்கு இந்த ஆபத்தை எதிர்கொள்ளும் வழிதான் தெரியவில்லை.

**- அ.மார்க்ஸ் -**



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கைதடி லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்திய கண் பரிசோதனை முகாமும் மருத்துவ முகாமும், சாவகச்சேரி பொலிஸ் பிரிவின் நடமாடும் சேவையும் கைதடி விநாயகர் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது பொலிஸ் நடமாடும் சேவையினர் பதிவுகளை மேற்கொள்வதனையும், ஆயுர்வேத மருத்துவர் நோயாளியை பரிசோதிப்பதனையும், துஷா மூக்குக்கண்ணாடி உரிமையாளர் ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதனையும் காணலாம்... (51,90)

## பண்ணை-ஊர்காவற்றுறை வீதி 2 ஆவது பாலம் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை ஊர்காவற்றுறை வீதி புனரமைப்புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் பண்ணைக்கும் மண்டைதீவு சந்திக்கும் இடையில் இரண்டாவது பெரிய பாலத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பாலத்தின் ஒருபகுதிக்கான கட்டுக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில் மறுபகுதிக்கான கட்டுக்கள் நிர்மாணிக்கப்படுகிறது. (பா)

## பொல்லால் அடித்தவர் கைது

அண்மையில் மல்லாகம், கோட்டைக்காடு மயிலங்காட்டில் வசித்துவரும் சந்திரன் நிரஞ்சன் குமார் (வயது 40) என்பவரை அவரது மனைவியின் தம்பியாகிய மல்லாகம் கோட்டைக்காட்டில் வசித்துவரும் மார்க்கண்டு ராஜேந்திரன் என்பவர் பொல்லால் அடித்து காயங்கள் ஏற்படுத்தியமையினால் அவர் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை கைது செய்த சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எமது அடையாளம் எதுவென தெரியாது வளரும் இளம் சமுதாயத்தை காக்க வேண்டும்

### குளமங்கால் பங்குத்தந்தை றெக்ஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிறுவனப்படுத்தப்பட்ட நிறுவனப்படுத்தப்படாத சக்திகளால எமது தமிழ் அடையாளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் அழிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி எமது அடையாளங்கள் இன்று தொலைக்கப்படுவதுடன். எமது அடையாளம் எது என்று தெரியாத நிலையிலேயே இளம் சமுதாயம் வளர்கின்றது என குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியர் ஆலய பங்குத்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா தெரிவித்தார்.

வலி.வடக்கு தெல்லிப்பளை கலாசாரப்பேரவையின் கலாசார விழா 2014 நிகழ்வு பிரதேச செயலக அமரர் திலகநாயகம் போல பத்தினியம்மா மண்டபத்தில் வலி.வடக்கு தெல்லிப்பளை கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலாளருமாகிய கனகராசா சிறீமோகனன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மனிதன் பிறக்கும் போதே ஒரு பண்பாட்டுக்குள்ளே பிறக்கின்றான். அவன் வளரும் போது அப்பண்பாடும் அவனோடு கூடவே வாழ்கின்றது. இப்பண்பாடே அவனுடைய வாழ்வாகவும் வாழ்வே அவனுடைய பண்பாடாகவும் அமைகின்றது. இப்பண்பாடு அவனுக்கு எந்த நாடு, எந்த இனம், எந்த சமயம் என்ற அடையாளத்தினைக் கொடுக்கின்றது. இவை இல்லாமல் ஒரு மனிதன் இருக்கவே முடியாது. இவ் அடையாளங்கள் யாவும் மனிதனை உருவாக்குகின்றன. மனிதனும் இவற்றினை உருவாக்கியே வளர்கின்றான்.

இந்த வகையிலேயே தெல்லிப்பளை பிரதேச செயலக கலாசாரப்பேரவையினரால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் எமது சமுதாயத்திற்கு மிக அவசியமானவை.

இந்தப் பின்னணியில் எமது அடையாளத்தைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் காத்திரமான செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்ல கலாசாரப்பேரவை முன்வரவேண்டும். கலாசார விழாக்களுக்கு அப்பால் ஒவ்வொரு தமிழனும் தனது நாளாந்த செயற்பாடுகளில் தமிழ் அடையாளத்தை உணர்ந்து கொள்ள அதை வளர்த்துக் கொள்ளத் தக்க முறையில் தன் செயற்பாடுகளினை வகுத்துக்கொள்ள வேண்டும். வீடுகளிலும் பாடசாலைகளிலும் வேலைத்தளங்களிலும் சமயச் செயற்பாடுகளிலும் இச் செயற்பாடுகள் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் மிகவும் சவால் நிறைந்தவை என்பதனை மறுக்க முடியாது. அதனாலேயே இவற்றை விட்டுவிடவும் முடியாது.

கலாசாரப் பேரவை தனது திட்டமிடல் வட்டத்தை மேலும் விரிவாக்கி பல்வேறு தரப்பினரையும் உள்வாங்கித் தன் எதிர்கால பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றார். (63)

## ஜெனிஸ்ரனுக்கு விருது

"பலாலி தும்பளை கருணை உள்ளம்" இயக்குநர் ஜெனிஸ்ரன் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டுக்குரிய விருதினை பெற்றுக் கொண்டார்.

2014 ஆம் ஆண்டிற்கான வடமாகாண சமூக சேவைகள் திணைக களத்தின் விருதினை "பலாலி தும்பளை கருணை உள்ளம்" இயக்குநர் சிங்கராசா. பெனடிட் வின்ச ஞானறஞ்சன் (ஜெனிஸரன்) கடந்த வெள்ளிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலையில் சர்வதேச மாற்று வலுவுடையோர தின விழாவின் போது பெற்றுக் கொண்டார். வடமாகாண சமூக சேவ்வகள திணைகளப்பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ.போதனாவைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலா நிதி நந்தகுமார், கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆர்.ரவீந் திரன், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வீ.எஸ்.மகேந்திரன், யாழ். நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை பிரதி அதிபர் சத்தியபாலன், வடக்கு குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் பிராந்திய இணைப்பாளர் வி.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாற்று வலுவுடையவருக்கு ஆற்றிய சேவையினை கௌரவித்து, சமூகத்துக்கு உதவும் தன்னிகரற்ற சேவையை கௌரவித்தும் "பலாலி தும்பளை கருணை உள்ளம்" இயக்குநர் ஜெனிஸ்ரன தெரிவு செய்யப்பட்டு இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. (48)

## முரசின் இன்றைய பலன்

(17.12.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 02 ஆம் திகதி.
தசமி / சித்தம்.
சித்த நட்சத்திரம் மு.இ. 08.04 வரை. பின் சுவாதி.
இராகு காலம 12.22 - 01.52 வரை. சுபநேரம 04.52 - 06.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நேசம் மிக்கோர் நிழலாக நின்று உதவிக்கரம் நீட்டுவார்கள்.

**ரிஷபம்**
தொடுத்த காரியங்கள் இனிய முடிவினைக் கொண்டுவரும்.

**மிதுனம்**
விரிசலடைந்திருந்த சகோதர உறவு சுமுகமாதல்.

**கடகம்**
பொறுப்பின்றி யாருக்கும் பணம், பொருள் கொடுத்தல் ஆகாது.

**சிம்மம்**
வியாபாரப்போட்டியினால் அயல நிலையங்களுடன் மன்ஸ் தாபம ஏற்படும்.

**கன்னி**
பயணமுகவரின் சாமர்த்தியத்தினால் வெளியூர் பயணம் வெற்றியைத்தரும்.

**துலாம்**
தடைப்பட்டிருந்த விவாகத்திற்கு பச்சைக்கொடிகாட்டப்படும்.

**விருச்சிகம்**
செய்தொழிலில் போதிய கவனம் காட்டுங்கள்.

**தனுசு**
அரச ஊழியர்கள் மேலதிகாரிகளுடன் பகைக்க முற்படவேண்டாம்.

**மகரம்**
புதியனவற்றில் நம்பகத்தன்மையைக் கைவிடவேண்டாம்.

**கும்பம்**
காதலில் வீசிய சந்தேகம் தீர்ந்து விடல்.

**மீனம்**
ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிப்பில் கவனஞ் செலுத்தல்.

# மதுவிற்பனை நிலையத்தை அகற்ற நகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை

### - குற்றம்சாட்டுகிறார் மன்னார் நகரசபை உறுப்பினர் -

(மன்னார்)

மன்னார் பெரிய கடைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மது விற்பனை நிலையத்தை அகற்ற இதுவரை ஏன் மன்னார நகரசபை நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என மன்னார் நகரசபை உறுப்பினர் என்.நகுசீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னார் நகர சபையின் இவ்வருடத்திற்கான இறுதிக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நகர சபையில் இடம்பெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகரசபைக்குட்பட்ட பெரிய கடைப் பகுதியில் மன்னார் நகரசபையின் அனுமதி இன்றி மது விற்பனை நிலையம் ஒன்றை திறந்துள்ளனர்.

குறித்த மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டு ஒரு வருடத்தை தாண்டுகின்றது. ஆனால் மன்னார் நகரசபையிடம் விற்பனை உரிமம் பெறுவதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் குறித்த மது விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது.

குறித்த மது விற்பனை நிலையத்தினால் அப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தொடர்ச்சியாக எங்களிடம் முறையிட்டு வருகின்றனர்.

எனவே மன்னார் நகர சபை இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். என நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த மன்னார் நகரசபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம்,

குறித்த மதுவிற்பனை நிலையத்திற்கு மன்னார் நகர சபை எவ்வித அனுமதியையும் வழங்கவில்லை. ஆனால் அவர்கள் ஏனைய சகல அனுமதியையும் பெற்றுள்ளனர். அப்பகுதி மக்களின் ஒற்றுமை இன்மையினால் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. அரசியல் செல்வாக்குடனும், பொலிசாரின் ஆதரவுடனும் குறித்த மது விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது. இதனால் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனத் தெரிவித்தார்.




## யாழ்.வர்த்தகர்களுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் 50,000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தாக யாழ் பாவனையாளர் அதிகார சபை பொறுப்பதிகாரி த.வசந்தசேகரம், தெரிவித்தார்.

நிறை குறைந்த பாண் விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில், யாழ்.நகரப்பகுதியிலுள்ள 3 கடை மற்றும் 2 வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக, பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளால் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து 5 கடை உரிமையாளர்களுக்கும் தலா 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பொறுப்பதிகாரி தெரிவித்தார்

## ஜனாதிபதிக்கு ஆதரவு

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கட்சியின் வவுனியா மாவட்ட காரியாலயம் மன்னார் வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்துகொண்டு அந்த அலுவலகத்தை திறந்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதாக கட்சியின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (70)

## பூநகரி பிரதேச செயலகத்தில் மாற்றுத்திறனாளிகள் தினம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவின் சிறுவர் முதியோர் மாற்றுத்திறனாளிகள் தின விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.


பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்ட செயலர் ச.கிருஸ்ணேந்திரன சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் வே.தபேந்திரன், பூநகரி கோட்டக்கல்வி அலுவலர் சு.தர்மரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கலை நிகழ்வுகளுடன் சிறுவர் முதியோர் மாற்றுத்திறனாளிகள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது. (90)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவில் முரசுமோட்டை, ஊரியான் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்ட வீடு ஒன்றின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்து வருவதினைக் காணலாம். (பா.பார்த்தீபன்)

# ஆயுர் வேதம்



## பித்த சீற்றத்தை அடக்க!

கண் எரிச்சல், வாய்ப் புண், உடல்சூடு, சிறுநீரக எரிச்சல், அதிக வியர்வை, உடல் துர்நாற்றம், போதிய தூக்கமின்மை போன்ற உபாதைகளால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உடலில் பித்தம் எனும் தோஷம் அதிகரித்திருக்கலாம்.

உணவில் காரம், புளி, உப்பு, எண்ணெய் போன்றவை, நல்லெண்ணெய், கொள்ளு, கடுகு, புளித்த மோர், புளிப்பான பழங்கள், மிளகு, தயிர், உழுந்து, மீன், ஆட்டு மாமிசம் போன்றவற்றின் அதிக சேர்க்கை இந்தப் பித்தத்தை அதிகப்படுத்தலாம்.

சக்திக்கு மீறிய சாகசங்கள் செய்தல், அதிகமாக வெயிலில் அலைந்து திரிதல், புகை அதிகம் உள்ள பகுதிகளில் வசித்தல், வலுக்கட்டாயமாக பசியைக் கட்டுப்படுத்துதல், தண்ணீர் தாகத்தை வலுக்கட்டாயமாக அடக்குதல், பித்தங்களின் குணங்களாகிய சூடு, ஊடுருவும் தன்மை, திரவம் போன்ற குணங்களைக் கொண்ட உணவுகளை உண்ணுதல் போன்ற செயற்பாடுகளினால் கல்லீரல் மற்றும் மண்ணீரல் பகுதிகளிலிருந்து பித்தத்தினுடைய சீற்றமானது அதிகரிக்கக்கூடும்.

மேலும், மனதைச் சார்ந்த கோபம், பயம், ஆசை, பொறாமை போன்றவற்றினாலும் பித்தம் குடல் பகுதியில் அதிகரிக்கக்கூடும். சரத்காலம் எனப்படும் இலையுதிர்காலம் மழைகாலத்தின் பின்பகுதி ஆகியவற்றிலும் பித்தத்தின் சீற்றமானது இயற்கையாகவே மனிதர்களுக்கு உடலில் அதிகரிக்கக்கூடும். வெளிக்காரணங்களாக சூடான காற்று, வெயில், மது அருந்துதல் மூலமாகவும், பித்தம் சீற்றம் பெறக்கூடும்.

பித்தத்தை இருவகையில் சிகிச்சை செய்து மாற்றலாம். அவை சோதனம் அதாவது வெளியேற்றுதல் அல்லது சமனம் அதாவது அடக்குதல் என்று இருவகைப்படும்.

நல்ல உடல் வலு இருந்து பித்த உபாதையின் தாக்கமும், அதிகரித்திருக்கக் கூடிய நபர்களுக்கு சோதனம் எனும் குடல் சுத்தி முறை சிகிச்சை சிறந்தது. ஏனென்றால் ஒருமுறை பித்ததோஷத்தை உடலில் இருந்து வெளியேற்றினால் அது மறுபடியும் சீற்றம் பெறுவதற்கான வாய்ப்பை தவிர்க்க முடியும்.

உடல் வலு குறைந்தவர் மற்றும் பித்த சீற்றத்தின் அறிகுறிகள் சிறிய அளவிலேயே தென்படுதல் போன்ற நிலை உள்ளவருக்கு அடக்குதல் எனும் சிகிச்சை முறையே போதுமானதாகும். இதில் நீங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

நல்ல வலு மற்றும் பித்த சீற்றம் அதிகமுள்ளவராக நீங்கள் இருந்தால் ஆயுர்வேத மருந்துகளாகிய த்ரிவ்ருத் லேஹ்யம், அவிபத்தி சூரணம், கல்யாணகுலம், த்ரிபலா சூரணம் போன்றவற்றில் ஒன்றை உங்களுடைய குடல் தன்மைக்கேற்ப கொடுத்து பேதியை ஏற்படுத்தி பித்தத்தை வெளியேற்றலாம்.

வலுவும் பித்தமும் குறைந்தநிலையில் இருந்தால் வாசாகுடூச்யாதி கஷாயம், த்ராக்ஷாதி கஷாயம், குடூச்யாதி கஷாயம், சங்க பற்பம், அப்ரக பற்பம், விதார்யாதி க்ருதம் போன்ற மருந்துகளை மருத்துவர் ஆலோசனையின் சாப்பிட்டு குணம் பெறலாம்.

எந்த நிலையிலும் பித்த சீற்றத்தை அடக்குவதற்கு துவர்ப்பு, கசப்பு மற்றும் இனிப்புச்சுவை கொண்ட உணவுவகைகள் உதவிடக் கூடியவை.

மனதை லேசாக்கிக் கொள்தல், கோபதாபங்களுக்கு தக்க போக்கிடம் காட்டி வாழக்கூடிய திறமையை வளர்த்துக் கொள்ளுதல், நல்ல நண்பர்களுடன் மகிழ்ச்சியோடு பழகுதல், உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும் தூய சந்தனத்தை பூசுதல், காலையில் குளிப்பதற்கு அரைமணி முன் ஆயுர்வேத மூலிகைத் தைலங்களாகிய ஹிமசாகரம், சந்தனாதி, அம்ருதாதி, சந்தனபலாலாஷி, பலாதாத்ர்யாதி போன்றவற்றில் ஒன்றை தலையில் ஊறவைத்து அதன்பிறகு குளிர்ந்த நீரில் குளித்தல், மனதிற்கு இன்பத்தைத் தரும் இசையை இரவில் படுக்கும் முன் கேட்பது போன்றவை பித்தத்தை மட்டுப்படுத்தும் ஒருசில சிகிச்சை முறைகளாகும்.

## வனவாசம் செல்வதற்கு தயாராகும் ரத்னதேரர்

(கொழும்பு)

நடைமுறையிலுள்ள அரசியல் கலாசாரத்தை பார்க்கும் போது ஏற்படும் விரக்தியின் காரணமாக வனவாசம் செல்ல தோன்றுகிறது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய சுற்றாடல் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரத்ன தேரர் "சுற்றாடலுக்கு ஏற்ற அபிவிருத்திகளை மேற்கொள்வதில் ஆளுங்கட்சியின் தலைவர்கள் தவறியுளளனர் என்று சுட்டிக்காட்டினார்.

# ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் 3 இற்கு 206 பேர் இணைப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் 3 இல் புதிதாக 206 பேர் நேற்று முன்தினம பதவியேற்றனர்.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் இசுருபாயவிலுள்ள கல்வியமைச்சின் இரண்டாம் மாடியில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெற்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் டி.எம்.எல்.சி.சேனாரத்ன கடிதம் மூலம் விடுத்த அழைப்பின்பேரில் கல்வியமைச்சிற்குச்சென்ற 206 பேருக்கும் கடமையேற்றல் கடிதத்திற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் அதில் கடமையேற்று எழுதிக் கொடுத்துள்ளனர். இப்புதிய 206 கல்வியியலாளர்களில் சுமார் 50 பேரே தமிழ் மொழி மூல கல்வியியலாளர்களாவர்.

மீதி சுமார் 156 பேரும் சிங்கள மொழி மூல கல்வியியலாளர்களாவர்.

தெரிவான 206 பேருக்கான திசைகோட்படுத்தல் பயிற்சி நெறியானது எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஜனவரி 15 ஆம் திகதி வரை மூன்று வார காலங்கள் இடம் பெறும்.

தமிழ் மொழி மூல கல்வியியலாளர்களுக்கான திசைகோட்படுத்தல் பயிற்சி நெறி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் சிங்கள மொழி மூல கல்வியியலாளர்களுக்கான திசைகோட்படுத்தல் பயிற்சி நெறி பெனிதெனிய தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

இதற்கான விபரங்களடங்கிய கடிதங்கள் அனைவருக்கும் அங்கு வைத்து வழங்கப்பட்டன.

இப்பயிற்சிநெறியின் பின்னரே நியமனக்கடிதங்கள் வழங்கிவைக்கப்படுவதோடு நாட்டிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகளில் விரிவுரையாளர்களாகவும் ஆசிரியர் வள நிலைய முகாமையாளர்களாகவும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இப்புதிய விரிவுரையாளர்கள் எந்த கல்வியியல் கல்லூரிக்கு நியமிக்கப்படுவர் என்பதும் இப்பயிற்சியின் பின்னரே தெரியவருமென கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆசிரியர் சேவையிலுள்ள இவர்கள் அனைவரும் 15.12.2014 முதல் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் 3 இற்குள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கடமையையும் நேற் முன்தினம் பொறுப்பேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பிரசாரத்திற்கு இ.போ.ச முறைப்பாடு செய்துள்ள பவ்ரல்

(கொழும்பு)

PAFFREL

தேர்தல் நடவடிக்கைகளுக்கென இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் பயன்படுத்தப்புடுவது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

தேர்தல் பிரசார கூட்டத்திற்கு செல்ல 500 பஸ்கள் தயார் நிலையில் உள்ளதென தகவல் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பஸ்கள் தயார் நிலையில், உள்ளமைக்கான காரணத்தை விளக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## பிரசாரத்திற்கு சென்ற பேருந்துகளின் ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

பாணந்துறையில் இடம் பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்காக இரத்தினபுரி பஸ் டிப்போவில் இருந்து விடுவிக்கப்பட்ட 25 பஸ்கள் தொடர்பில் உரிய கொடுப்பனவு ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.





இந்தக்கூட்டத்துக்காக 500 பஸ்களை ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஏற்கனவே பவ்ரல் என்ற தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் முறையிட்டிருந்தது. இந்தநிலையிலேயே இரத்தினபுரி பஸ் டிப்போவில் இருந்து 25 பஸ்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து குறித்த பஸ்கள் விடுவிக்கப்பட்டபோது அவற்றுக்காக செலுத்தப்பட்ட பணத்துக்கான ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் இரத்தினபுரி பஸ் டிப்போ முகாமைக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவும் உரிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டு பஸ்களை வாடகைக்கு அமர்த்திச்செல்லமுடியும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரபாகரனை ஒழித்தது போல் கே.பி.யை பிடித்ததும் பெருவெற்றி

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

பிரபாகரனை தோல்வியடைச் செய்தது போல கே.பி.யை பிடித்ததும் பாரிய வெற்றி என பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத நிறைவில் சரண்டைந்த புலி உறுப்பினர்களை புனர்வாழ்விற்கு உட்படுத்திய போதும் அவர்கள் நூறு வீதம் மாற்றம் அடைந்ததாகக் கூற முடியாதென பாதுகாப்பு செயலாளர் கூறினார்.

ஆனால் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்தியுள்ளதால் எவ்வித அழுத்தம் வந்தாலும் அதனை எதிர்கொள்ள முடிவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள போதும் சர்வதேச சக்திகள் இன்னமும் செயற்பாட்டில் இருப்பதாகவும் ராஜபக்ஷவை பலமிழக்கச் செய்தால் மாத்திரமே செயற்பட முடியும் என்ற நோக்கத்தில் அந்த சக்திகள் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷ அல்ல வேறு யார் அரசாங்கத்தை கைப்பற்றினாலும் சர்வதேச அழுத்தம் தற்போதைய நிலைபோன்றே காணப்படும் என அவர் கூறியுள்ளார்.

புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள், ஜெனீவா மனித உரிமை சபை த.தே.கூ. போன்றவற்றால் அச்சுறுத்தல் இருப்பதாகவும் இதன்மூலம் இராணுவ நீதிமன்றுக்கு ஒரு தரப்பினரை கொண்டு செல்வதில் அபாயம் காணப்படுவது தெளிவாவதாகவும் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மூலம் பயங்கரவாதத்தை அழிக்க முடிந்ததாகவும் தான் அரசியலுக்கு வருவது பற்றிக் கூற முடியாது என்றும் அரசியலில் ராஜபக்ஷமார் அதிகம் இருப்பதால் தானும் அரசியலுக்கு வருவேன் என்ற அச்சம் பலருக்கும் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இந்திய சிறுமி மீது சேஷ்டை டுபாயில் இலங்கையர் கைது



ஐக்கிய அரபு இராச்சியம் - டுபாயில் 11 வயது சிறுமியை வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்ததாக இலங்கையர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


அல்குசேயின் என்ற கடையில் ஒக்ரோபர் 7ஆம் திகதி இந்திய சிறுமியை வல்லுறவு செய்யும் நோக்கில் தொட்டு சேஷ்டை புரிந்ததாக சிறுமி தனது தந்தையிடம் தெரிவித்துள்ளார்.


அதன்பின் சிறுமியின் பெற்றோர் அல்குசேயின் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் 31 வயதான இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுளளது.

வழக்கு விசாரணை ஜனவரி 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

குறித்த இலங்கையர் சிறுமியை தொடும் காட்சிகள் சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.





தலைமன்னார் புகையிரத பாதை நிர்மாணப்பணிகள் நிறைவு பெறும் கட்டத்தை அடைந்துள்ளன. இங்கு புனரமைக்கப்பட்டுள்ள புகையிரதப் பாதையையும் புகையிரத நிலையத்தையும் காணலாம். (படங்கள்–எஸ்.நிரூஜன்)

32. எழுத்து வழக்கில் அமைந்த வாக்கியத்தை தெரிவு செய்க
1) முதியவர் கோடரியால் மரத்தை வெட்டினார்
2) சம்பவத்தை கண்ட நாம் பதற்றம் அடைந்தோம்
3) அப்பா நேற்று புடவைக் கடைக்குச் சென்றார்


33.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | க | 2 | வ | 5 |
| ப | ம | மி | ப | ம |
| 2 | 5 | 4 | ம | 5 |

கட்டத்தில் அதிக தடவை இடம்பெற்ற எழுத்துக்களும் இலக்கங்களும் எவை?
1) மி, 3 2) ம, 5 3) ப, 2

34. 2012ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின் மீண்டும் எந்த மாதத்தில் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரும்?
1) பெப்ரவரி 2) ஏப்ரல் 3) மே

35. மின்சோடனை ஒன்றில் மூன்று வர்ண மின்குமிழ்கள் மாறிமாறி கட்டப்பட்டன. 27ஆவது மின்குமிழ் மஞ்சள்நிறம், 19ஆவது மின்குமிழ் வெள்ளைநிறம் 11ஆவது மின்குமிழ் பச்சைநிறம் ஆகும். வரிசையில் உள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் மின்குமிழ்கள் முறையே
1) வெள்ளை, பச்சை, மஞ்சள்
2) மஞ்சள் , வெள்ளை, பச்சை
3) பச்சை, வெள்ளை, மஞ்சள்


36. 


உருவில் A யினால் காட்டப்படுவது
1) வௌவால் 2) அணில் 3) ஏரும்புண்ணி

37. ஹரி திங்கட்கிழமை உண்டியலில் இட்ட பணத்தில் இரு மடங்கு பணத்தை செவ்வாய்க்கிழமையும் செவ்வாய்க் கிழமை உண்டியலில் இட்ட பணத்தின் இரு மடங்கு பணத்தை புதன்கிழமையும் உண்டியலில் இட்டு சேமித்தான். மூன்று நாட்களிலும் அவன் சேமித்த மொத்தப்பணம் ரூபா 91 எனின் திங்கட்கிழமை உண்டியலில் இட்ட பணத்தொகை யாது?
1) ரூபா 12 2) ரூபா 13 3) ரூபா 16

38. 
```
  T 4 5
x     T
-------
 1 0 T 5
```
பெருக்கல் செய்கையின் படி T இன் பெறுமானம் யாது?
1) 5 2) 6 3) 3

39. A.B இரு செங்கற்குவியலிலும் உள்ள செங்கற்களுக்கு இடையிலான வித்தியாசம் யாது?
....................................


A


B

40. சுதந்திர போராட்டத்தின் பிரதான தளபதியாக இருந்த இவர் மங்களவாள் அணிவிக்கப்பட்டு ஸ்ரீவிக்கிரம சர்வசித்தி எனும் பெயரால் முழு நாட்டினதும் மன்னனாக முடி சூட்டப்பட்டு ஆசீர்வாதிக்கப்பட்டார். இவர் யார்?
..........................................................................................

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(1).III (2).I (3).III (4).I (5).I (6).III (7).I (8).II (9).I (10).II (11).III
(12).III (13).I (14).III (15).I (16).II (17).I (18).III (19).I (20).II (21).II (22).II
(23).II (24).I (25).III (26).II

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015
பகுதி - I
45 நிமிடம்

# கல்வி முரசு



1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

❖ கீழே தரப்பட்ட உருக்களை கவனத்தில் கொண்டு விடை தருக


A B C D E

01. ஊன் உண்ணிப்பறவைகளை குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் எவை?
1) B உம், D உம் 2) B உம், E உம் 3) A உம், C உம்

02. இரவில் நடமாடும் பறவைகளை குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் எவை?
1) A உம், D உம் 2) C உம், E உம் 3) C உம், D உம்

❖ தரப்பட்ட இரு உருக்களையும் ஒன்றன்மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவை தெரிக

03. 
1) 2) 3)

04. 
1) 2) 3)

05. பின்வரும் தகவலை அவதானியுங்கள்

2 பென்சிலின் விலை = 1 பேனாவின் விலை
3 பேனாவின் விலை = 1 புத்தகத்தின் விலை

| யாழினி | வாமதி | விதுஷா |
|---|---|---|
| 3 பென்சில் | 1 பென்சில் | 2 பென்சில் |
| 1 பேனா | 2 பேனா | 1 பேனா |
| 1 புத்தகம் | 2 புத்தகம் | 2 புத்தகம் |

மேலே உள்ள தகவல்களுக்கு ஏற்ப கூடுதலான பணத்தை கொடுக்க வேண்டியவர் யார்?

06. சேனைப்பயிர்ச்செய்கை என்பது
1) மழையை நம்பி செய்யப்படும் பயிர்ச்செய்கை
2) காடுகளை அழித்து செய்யப்படும் பயிர்ச்செய்கை
3) மலைப்பிரதேசங்களில் செய்யப்படும் பயிர்ச்செய்கை


07. மனித வாழ்வில் மாறிமாறி வருவது
1) பசியும்,தாகமும் 2) இன்பமும், துன்பமும் 3) சொத்தும், சுகமும்

08. அவனின்றி அணுவும் அசையாது என்பதன் மூலம் வலியுறுத்தப்படுவது
1) அரசனின் சிறப்பு 2) இறைவனின் மகிமை 3) அறிஞர்களின் புகழ்

09. சுதந்திர தின விழாவிற்காக கொடிக்கம்பங்கள் வரிசையாக சமதூர இடைவெளியில் நடப்பட்டன. 6 ஆவது கொடியில் இருந்து 9ஆவது கொடி வரையிலான தூரம் 6m ஆகும். 3ஆவது கொடியில் இருந்து 12 ஆவது கொடி வரையான தூரம் யாது?
1) 9m 2) 12m 3) 18m

10. கடிகாரம் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 3 நிமிடங்கள் கூடுதலாக ஓடுகின்றது. கடிகாரம் மு.ப. 8மணிக்கு சீர்செய்யப்பட்டது. எனின் பி.ப.4மணிக்கு கடிகாரம் காட்டும் நேரம் யாது?
1) 4 மணி 3 நிமிடம் 2) 4 மணி 24 நிமிடம் 3) 3 மணி 57நிமிடம்


❖ எண்கோலத்தில் ? இக்குறியிடு இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண்ணை தெரிந்து கோடுக

11. 

1) 4 2) 12 3) 8

12. 

1) 9, 2 2) 1, 1 3) 1, 9

13. 
உருவில் உள்ள கூம்பகத்தின் மேற்பகுதி புள்ளிக்கோட்டின் வழியே வெட்டி அகற்றப்பட்டது. வெட்டி அகற்றியபின் எஞ்சிய உருவில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
1) 14 2) 8 3) 12



14. என்னுடன் நடனபயிற்சியில் ஈடுபடும் சகலரும் பாடக்கூடியவர்கள், சரண் நன்றாகப்பாடக்கூடியவன் ஆகவே சரண் என்னுடன் நடனப்பயிற்சியில் ஈடுபடுகிறான் என்பது?
1) பிழையானது 2) கூறமுடியாதது 3) சரியானது

15. எனது பெயர் நர்மதா. நான் பாடசாலைவீட்டு வரும்வழியில் எனது மாமாவை சந்தித்தேன் அவர் தனது மகள் அபிநயாவை அழைத்து வருவதற்காக பாடசாலை நோக்கிச் செல்வதாக கூறினார் இத்தகவலுக்கு அமைய
1) நர்மதாவின் தந்தை அபிநயாவின் தந்தையின் சகோதரன் ஆவார்
2) அபிநயாவின் தந்தை நர்மதாவின் தாயின் சகோதரர் ஆவார்
3) நர்மதாவின் தாய் அபிநயாவின் தாயின் சகோதரி ஆவார்

16. இரு எண்களின் பெருக்குத் தொகை 90 ஆகும். அவ்விரு எண்களுக்கும் இடையிலான வித்தியாசம், 9 ஆகும். அவ்விரு எண்களும் எவை?
1) 10,9 2) 18, 5 3) 15,6


17. கூடை ஒன்றில் உள்ள பழங்களில் $\frac{2}{5}$ பங்கு 16 பழங்கள் எனின் $\frac{1}{4}$ பங்கு எத்தனை பழங்கள்?
1) 20 2) 10 3) 25

18. 3 தொடக்கம் 12 வரையுள்ள எண்ணும் எண்களின் கூட்டுத்தொகை யாது?
1) 72 2) 78 3) 75

19. 
கட்டத்தில் இல்லாத வடிவம் எது?
1)  2)  3) 



20. 150m நீளமான பாதையின் இரு பக்கங்களிலும் 10m தூரத்தில் ஒரு கம்பம் வீதம் நடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பாதையின் இரு பக்கத்திலும் நடப்பட்ட மொத்த தூண்கள் எத்தனை?
1) 16 2) 32 3) 30

21. 

இவ்வியந்திரத்தினுள் என் ஒன்று இடப்பட்டு அவ்வெண் மூன்றால் பெருக்கப்பட்டு ஐந்துடன் கூட்டப்பட்டு வரும் விடையை இரண்டால் வகுத்ததும் விடையாக 13 வந்தது. எனின் இயந்திரத்தினுள் இடப்பட்ட என் யாது?
1) 7 2) 9 3) 6

22. இவ்வியந்திரத்தினுள் 15ஐ செலுத்தினால் வரும் விடை யாது?
1) 24 2) 25 3) 30

23. நாளை வரும் போது நிறக்கடதாசித்துண்டுகள், பசை, வெள்ளைத்தாள் என்பவற்றை கொண்டு வருமாறு ஆசிரியர் கூறினார். ஆகவே நாங்கள் செய்ய போகம் ஆக்கம்
1) கொலாஜ் 2) அல்பனா 3) ஸ்ரென்சில்

24. காய்கறி → வாழைக்காய் → யானை → வாழை → பிடியானை → ………… அடுத்து வரும் சொல்லை தெரிந்து கோடிடுக
1) பிடிப்பு 2) கைப்பிடி 3) மாடிப்படி

25. பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனி போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்


இப்பாடலை பாடியவர்
1) சுப்பிரமணியபாரதியார்
2) தேசிக விநாயகம்பிள்ளை
3) அப்துல்லா புலவர்

தயாபரன் தனது வீட்டில் இருந்து மு.ப.8மணிக்கு நகரத்தில் உள்ள வைத்தியசாலையை நோக்கிப் புறப்பட்டார். அவர் முதலில் வீட்டிலிருந்து 5km தூரத்தை மணிக்கு 10km வேகத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்றார். பின் அங்கிருந்து 20km தூரத்தை மணிக்கு 60km வேகத்தில் செல்லும் பேருந்தில் சென்று நகரத்தை அடைந்தார். அங்கிருந்து 2km தூரத்தை மணிக்கு 4km வேகத்தில் நடந்து சென்று வைத்தியசாலையை அடைந்தார்.

26. தயாபரன் சென்ற மொத்த தூரம் யாது?
1) 30km 2) 24km 3) 27 km

27. தயாபரன் வைத்தியசாலையை அடைந்த நேரம் யாது?
1) 9 மணி 40நிமிடம் 2) 9மணி 30 நிமிடம் 3) 9மணி 20 நிமிடம்

❖ கீழே சில உருக்களின் கூட்டுத்தொகை தரப்பட்டுள்ளன




28.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 18 2) 28 3) 20

29.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 28 2) 18 3) 20

30.
```
  P 2 T 3
+ 2 S 5 B
  9 6 6 9
```
```
  B 2 T 3
+ 2 P S S
  .........
```
30. வெற்றிடத்திற்கு வரவேண்டிய விடை யாது?
1) 8997 2) 7975 3) 6984

31. சரிதாவின் தங்கை பவித்ரா, பவித்ராவின் சகோதரி வேதிகா ஆகவே வேதிகாவிற்கு சரிதா அக்கா என்பது
1) பிழையானது
2) கூறமுடியாதது
3) சரியானது





அச்சுவேலி தென்னிந்திய திருச்சபையினால் வில்லியம் குடும்பத்தினரின் இலவச சேவையாக நடாத்தப்படும் முன்பள்ளியின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் அச்சுவேலி கலாமினி மண்டபத்தில் நடைபெற்ற போது... (33)

## வடிகால்கள் சீரின்மை குடியிருப்புக்குள் வெள்ளநீர்

வலிகாமம் பகுதியில் பல இடங்களில் புதிதாக கட்டங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் மழைகாலங்களில் வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய வகையில் வடிகால்கள் சீராக அமைக்கப்படவில்லை என குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தனியார் காணிகளில் காணி உரிமையாளர்களால் உரிய வகையில் திட்டமிடப்படாமல் மற்றுமதில்கள் மற்றும் ஏனைய கட்டடங்களும் அமைக்கப்படுவதுடன் வடிகால்கள் சீராக அமைக்கப்படாமையால் மழை காலங்களில் வெள்ளநீர் வழிந்தோட முடியாது குடியிருப்புக்களுக்குள்ளும் நீர் தேங்கி நிற்பதாகவும் குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே கட்டடங்களை அமைப்போர் வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய வகையில் வடிகால்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என குடியிருப்பாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (66)

## அரசியல் கருத்தரங்கு

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்தியக் குழுவினால் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு "ஜனாதிபதித் தேர்தலும் மக்கள் எதிர்நோக்கும் சவால்களும்" எனும் தலைப்பிலான பகிரங்க அரசியல் கருத்தரங்கு காங்கேசன்துறைவீதி 62 கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பிரதான உரையை புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் நிகழ்த்துவார்.

மேலும் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம் சட்டத்தரணி, சோ.தேவராஜா, இளைஞர் முன்னணியைச் சேர்ந்த த.பிரகாஷ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

## கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப மாற்று பயிற்சி

யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் இரசாயனம் சார்ந்த தொழில்நுட்ப மற்றும் பயிற்சிநெறி சபை அலுவலகத்தில் எதிர் வரும் 20 ஆம், 21 ஆம் திகதி களில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியின் கீழ் குறித்த பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான செயன்முறைகள் வழங்கப்படும்.

டிற்றேயன்ற் பவுடர், சலவைத்தூள், நீலப் பொலிஸ், சப்பாத்து பொலிஷ், சுவர் நிரப்பி, சிரட்டைக்கரி என் பனவே வழங்கப்படவுள்ளன

இப்பயிற்சியினைப் பெற விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை அலுவலகத்தின 0212222421 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளும் படி சபையின் யாழ்.பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## உழவர் விழா


(சாவகச்சேரி)

மீசாலை வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க் சத்திய ஞானக்கோட்ட உழவர் விழா எதிர்வரும் முதலாம் திகதி முதல் தைப்பொங்கல் வரை நடைபெறவுள்ளது.

தைப்பொங்கல் அன்று கருத்தரங்கும் விசேட கலை நிகழ்வுகளும் அதிகாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## கடந்தகாலத்தை பாடமாகக் கொண்டு எதிர்கால செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்

### ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் நாம் கற்றுக் கொண்டவற்றை பாடமாகக் கொண்டு எதிர்காலச் செயற்பாடுகளை சரிவர முன்னெடுக்க வேண்டும் கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் ஒன்றிணைத்துப் பார்ப்பதால் தான் முரண்பாடுகளும் வீண் பிரச்சினைகளும் நமது இனத்திற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் நாம் கற்றுக் கொண்டவற்றை பாடமாகக் கொண்டு எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுத்தால் தமிழ் மக்கள் இழந்த அபிவிருத்திகளையும் வாழ்வாதாரங்களையும் மீட்டுக்கொள்ள முடியுமேன அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி பகுதிக்கான மாதர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகரசபை பொது மண்டபத்தில் இளைஞர் அணி உப தலைவர் அஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட வி.கே.ஜெகன் உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கற்பனை வாதங்களையும் விதண்டா வாதங்களையும் பேசுவதனால் எமக்கு எல்லாம் கிடைத்துவிடப்போவதில்லை. தற்போதைய சூழ்நிலையில் எமது இனத்தின் அபிலாசைகளை யதார்த்த பூர்வமான வழி முறைகளை கையாள்வதன் மூலம் எமது இனத்துக்கான தீர்வுகளையும் வாழ்வாதாரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் அழித்துக் கொண்டிருந்த யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி கொடுத்து எமது பகுதியையும் தென் பகுதியைப்போல பிரகாசிக்க வைத்த பெருமை இணக்க அரசியலை மேற்கொளளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே சாரும்.

யுத்தத்தினால் எமது பகுதி கண்ட அழிவுகளையும் இழந்த அபிவிருத்திகளையும் தூக்கி நிறுத்தக் கூட முன்வராத மாகாண சபை எப்படி தமிழர்களது அபிலாசைகளையும் அரசியல் தீர்வுகளையும் பெற்றுத்தருவார்கள் என நினைக்கின்றீர்கள். இவர்களது சுயநல அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும், என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், திருக்குமரன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி உதவி இணைப்பாளர் மெடிஸ்கோ, செந்தூரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வலிகாமம் வலய சாதனையாளர் கௌரவிப்பு அண்மையில் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநருக்கு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது. நினைவுப் பரிசிலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரிடம் கையளித்தார்.

## வாழ்வின் எழுச்சித்திட்ட பயனாளிகளுக்கு அடுத்த வருடத்திலிருந்து கொடுப்பனவு அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வாழ்வின் எழுச்சித் திணைக் களத்தின் ஒழுங்குபடுத்தலில் தொண்டைமான் நகர் கிராமத்திலுள்ள வாழ்வின் எழுச்சித்திட்ட பயனாளிகளுக்கான கருத்தூட்டல் நிகழ்வு நேற்று தொண்டைமான் நகர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் மாவட்ட வாழ் வின் எழுச்சித் திணைக்கள முகாமையாளர் கிராமிய வாழ்வின் எழுச்சித் திட்ட முகாமையாளர் மற்றும் கிராம அலுவலர்கள் கிராம மட்ட அமைப் புக்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகெண்டனர்.

இந்நிகழ்வில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் நன்மைகள் குறித்தும் அதனால் மக்களுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்தும் திணைக்கள முகாமையாளரால் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதன்படி 2015 ஆம் ஆண்டிலிருந்து சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் 1,2 அங்கத்தவர்களை உடைய குடும்பத்துக்கு 1000 ரூபாவாலும் 3 அங்கத்தவர்களை உடைய குடும்பத்துக்கு 2000 ரூபாவாலும் 4,5 அங்கத்தவர்களை உடைய குடும்பத்துக்கு 3000 ரூபாவாலும் கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அடுத்த வருடம் முதல் பயனாளிகள் குறித்த மீளாய்வும் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (77)

# பாகிஸ்தான் பாடசாலையில் தலிபான்கள் தாக்குதல்

## 84 குழந்தைகள் உட்பட 104 பேர் சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள இராணுவத்துக்குச் சொந்தமான பாடசாலையைக் குறிவைத்து தலிபான்கள் நடாத்திய தாக்குதலில் 84 குழந்தைகள் உட்பட 104 பேர் பலியானதாக பாகிஸ்தானின் டான் செய்தி இணையதளத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இராணுவ பாடசாலைக்குள் நுழைந்த 6 தீவிரவாதிகள் சரமாரியாக நடாத்திய தாக்குதலில் 84 குழந்தைகள் உட்பட 104 பேர் பலியாகினர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 500 இற்கும் மேற்பட்டோர் பள்ளி வளாகத்தில் பயங்கர வாதிகளால் சிறை பிடித்துவைக்கப்பட்டிருப்பதாகவும் முதற்கட்ட தகவல் தெரிவிக்கின்றது.

சம்பவ இடத்தில் இருந்த ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவன பத்திரிகையாளர் ஒருவர், "தலிபான் தீவிரவாதிகள் பள்ளி வளாகத்தில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். பள்ளி வளாகத்திலிருந்து துப்பாக்கிச் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது. காயமடைந்த மாணவர்களை மீக்க அம்புலன்ஸ் வாகனங்கள் உள்ளே சென்றுள்ளன" என கூறியுள்ளார்.


சம்பவ பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு லேடி ரீடிங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 84 குழந்தைகள், ஒரு இராணுவ வீரர் உட்பட 104 பேர் இறந்ததை மருத்துவமனை உறுதி செய்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்துக்கு தெஹ்ரிக் இ தாலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளதுடன். "பெஷாவர் இராணுவப் பள்ளியில் எங்கள் தற்கொலைப் படையினரே தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும் குழந்தைகளை குறிவைக்க வேண்டாம் என அறிவுறுத்தியிருக்கிறோம். எங்கள் இலக்கு பாகிஸ்தான் இராணுவத்தினர் மட்டுமே" என அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் முகமது உமர் கொரஸானி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்திருக்கிறார்.

உலகச் செய்திகள்

# இந்தியாவிற்கு எதிரான அமைப்புகளுடன் புலிகள் அமைப்பிற்கு தொடர்புகள் உள்ளதா?

## கவனம் செலுத்துகிறது இந்திய அரசாங்கம்




(புதுடில்லி)

புலிகள் அமைப்பு, இந்திய தேசத்துக்கு எதிரான அமைப்புக்களுடன் தொடர்புகளை கொண்டிருக்கிறதா? என்பது தொடர்பில் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் பிரித்தானிய பிரிவு, சீக்கியர் நடவடிக்கை வலைப்பின்னல் போன்றவற்றுடன் இந்த தொடர்புகள் பேணப்படுகிறதா? என்று இந்திய அரசாங்கம் கவனம் செலுத்துவதாக இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீடிக்கப்பட வேண்டுமா? என்பது தொடர்பில் புதுடில்லியில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் தீர்ப்பாயத்தில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே முன்னாள் அமைச்சர்கள் பா.சிதம்பரம் மற்றும் வி.நாராயணசாமி ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிகள் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்தநிலையில் மக்கள் தீர்ப்பாயத்தில் கருத்துரைத்துள்ள தமிழக அரசாங்கம், 2009ஆம் ஆண்டு போரில் தோல்வி கண்ட பின்னர், புலிகள் இன்னமும் தமிழீழ கொள்கையை கைவிடவில்லை. எனவே அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை[illegible] நீக்கினால், அது ஏனைய தீவிரவாத அமைப்புக்களுக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தி விடும் என்று குறிப்பிட்டுள்ளது.

# சிரியாவில் தாக்குதல் 26 தீவிரவாதிகள் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவின் முக்கிய பொருளாதார நகரமாக அலெப்போ விளங்கியது. ஆனால் அல் கொய்தா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடாத்தி இந்த நகரின் பாதிப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டனர். இதனை மீட்கும் நடவடிக்கையில் சிரியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில் அலெப்போவின் வடக்கு பகுதியில் தீவிரவாதிகளுக்கும், அரசு படைக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கர சண்டை நடைபெற்றது. இதில் 26 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.


இதனைத் தொடர்ந்து தீவிரவாதிகளின் வசம் இருந்த சில பகுதிகளை அரசு தன்வசப்படுத்திக்கொண்டது.

சிரியாவில் கடந்த 4 ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 1 இலட்சத்து 91 ஆயிரம் அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டு இருப்பதாக ஐ.நா.வின் சமீபத்திய அறிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சென்னையில் அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தி சமாளிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக பிரபல மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் மெரினா கடற்கரையில் மணல் சிற்பம் ஒன்றை உருவாக்கியிருப்பதைக் காணலாம்.

# அணுசக்தி நீர்மூழ்கியின் சோதனை ஓட்டம்



(புதுடெல்லி)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் ஐ.என்.எஸ் அரிஹன்ட், விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் சோதனை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டது. இதை பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்திய கடற்படையில் ஐ.என்.எஸ் சக்ரா என்ற அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் ஏற்கனவே உள்ளது. இது ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்டது.

இந்நிலையில் கடற்படைக்கு தேவையான அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை இந்தியாவிலேயே தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஐ.என்.எஸ் அரிஹன்ட் என்ற அணுசக்தி நீர்மூழ்கி கப்பல், விசாகப்பட்டினத்தில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் வடிவமைக்கப்பட்டது. 6 ஆயிரம் தொன எடையுள்ள இந்தக் கப்பலில் 83 மெகாவாட் திறனுள்ள அணு உலை உள்ளது. இந்தக் கப்பலில் இருந்து 3,500 கி.மீ தூரம் சென்று தாக்கக்கூடிய கே-4 ரக ஏவுகணைகள் மற்றும் 700 கி.மீ தூரம் சென்று தாக்கும் பிஓ 5 ரக ஏவுகணைகளையும் ஏவ முடியும்.

அதைக் கடலில் செலுத்தும் சோதனை நேற்றுமுன்தினம் தொடங்கியது. நீர்மூழ்கி கப்பலை கடலுக்கு அடியில் செலுத்துல், ஆயுதங்கள் பரிசோதித்தல் உட்பட கப்பலில் உள்ள அனைத்து வசதிகளும் இந்த கடல்சோதனையில் பரிசோதிக்கப்படவுள்ளன. அனைத்தும் திட்டமிட்டபடி நடந்தால், இன்னும் 2 ஆண்டில் இந்த கப்பல், கடற்படையில் சேர்க்கப்படும். ஐ.என்.எஸ் அரிஹன்ட் போருக்கு தயார் என அறிவிக்கப்பட்டு விட்டால், அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்கும் திறன்படைத்த 6 நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்ற பெயர் கிடைக்கும்.

# நிலக்கரி சுரங்க முறைகேடு மன்மோகனிடம் வாக்குமூலம்



நிலக்கரி சுரங்க முறைகேடு விவகாரத்தில், அப்போதைய நிலக்கரித் துறை அமைச்சரும், முன்னாள் பிரதமருமான மன் மோகன் சிங்கிடம் வாக்குமூலம் பதிய சி.பி.ஐ.க்கு சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குமார மங்கலம் பிர்லாவின் ஹிண் டால்கோ நிறுவன வழக்கை முடித்துக் கொள்வதாக கூறிய சி.பி.ஐ.இன் கோரிக்கையும் நிராகரிக்கப்படுவதாக நீதிமன்றம் தெரிவித்ததுள்ளது.

முன்னாள் நிலக்கரித் துறை செயலர் பி.சி.பரேக் தொடர்பு குறித்தும் சி.பி.ஐ மீண்டும் விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை குறித்த அறிக்கையை 2015 ஜனவரி 27 ஆம் திகதி தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்தோனேசியாவில் நிலச்சரிவு 56 பேர் பலி; 52 பேர் மாயம்

(ஜகார்த்தா)

மத்திய இந்தோனேசியாவில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 52 பேரைக் காணவில்லை எனவும் இதுவரை 17 உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அபிவிருத்தியில் அரசியல் கலந்தால் மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திசார்ந்த செயற்பாடுகள் அரசியல் நோக்கில் அணுகப்படுமானால் அது மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை ஒத்திவைக்குமாறு முன்மொழிந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் மக்களின் மேம்பாடு தொடர்பாக ஆராயப்படுகின்ற களமாகிய மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அரசியல் களமாகப் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

மாறாக நாடாளுமன்றம் போலவோ மாகாண சபை போலவோ அரசியல் பிரதிநிதிகள் நடந்துகொள்வது வருந்தத்தக்கது. அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்ற இவ்வாறான கலந்துரையாடல்களில் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும்.

பொதுவாக தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாறான கூட்டங்களை அரசியலுக்காக பயன்படுத்துவது வழமை.

அவர்கள் மாகாணசபையின் செங்கோலை தூக்கி எறிவதும் நாடாளுமன்றில் அநாகரிகமாக நடந்துகொள்வதையும் கூட வழமையாகக் கொண்டவர்கள்.

அதன் ஒரு தொடராகவே நேற்றைய கலந்துரையாடலும் அரசியல் சார்ந்து நோக்கப்பட்டதன் விளைவாகவே இவ்வாறான துயரான சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. எனவே இனிவரும் காலங்களில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் மக்களின் மேம்பாட்டையும் பிரதேசங்களின் அபிவிருத்தியையும் மையமாகக் கொண்ட கருத்துக்களை மட்டுமே வெளியிட வேண்டும் என்ற சத்தியப்பிரமாணம் செய்யப்படும் நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும். அதுவே இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்த வழிவகுக்கும்.

அபிவிருத்தி விடயங்கள் அரசியலுக்கு அப்பால் நோக்கப்பட வேண்டியவை. நாம் அந்தக் கொள்கையை கடைப்பிடித்ததன் விளைவாகவே எமது பிரதேசங்களில் மிகக்குறுகிய காலத்தில் பாரிய முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

இதனை மக்களும் நன்கு அறிவர். மாறாக நாமும் அனைத்து விடயங்களிலும் அரசியலை கையாண்டிருந்தால் இன்றும் எமது பிரதேசங்கள் சாம்பல் மேடுகளாகவே காட்சி தந்திருக்கும்.

மக்களின் வாழ்வில் ஒளியேற்றவேண்டும் என்ற அக்கறை அனைவரின் மனங்களிலும் உருவாகவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### இணைத்தலைமைக்கு...

பட்டதோ அவர்களே அழைக்கப்பட்டார்கள் என்பதுடன் மர்மநபர்கள் என்று யாரை இணைத்தலைவர் விக்னேஸ்வரன் குறிப்பிடுகின்றார் என்பது எனக்குத் தெரியவில்லை.

அத்துடன் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று யாரை அவர் சொல்லுகின்றாரோ என்பது குறித்தும் எனக்கு புரியவில்லை. இருப்பினும் எனது தலைமையுரைக்கு முன்பாகவே அவர்கள் குழப்பத் தொடங்கி விட்டார்கள். இதிலிருந்து யார் குழப்பவாதிகள் என்பது தெரிகிறது.

இந்நிலையில் எதிர்காலத்தில் எமது மக்கள் நலன்சார்ந்து செயற்படுவதற்கும், சுமுகமான தீர்விற்குமான நல்லெண்ண முயற்சிக்கும் மதிப்பளித்து இணக்கப்பாட்டிற்கு வருவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் பதிலளித்தனர்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### இந்திய...

வெளியுறவுச் செயலர் தமிழக தலைமைச் செயலருக்கு அனுப்பிய கடிதங்களில், இலங்கை மீனவர்கள் 30 பேரையும் அவர்களது படகுகளையும் தமிழக அரசு விடுவிக்க வேண்டும்.

இதன் மூலம் இலங்கையுடன் நல்லிணக்கம் ஏற்படும். இதுவே, அங்குள்ள சிறைகளில் இருக்கும் 66 தமிழக மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட 81 படகுகளையும் மீட்க உதவும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### தாக்குதலில்...

மேலதிக சிகிச்சை பெற்று வருகின்றார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது கூட்டமைப்பினர் நடாத்திய தாக்குதலில் ஸ்ரீரங்கேஸ்வரன் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் நோயாளர் விடுதியில் தங்கியுள்ள அவருக்கு மேலதிக சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### யாழ். செயலகத்தில்...

இதனால் செயலக கேட்போர்கூடம் அல்லோல கல்லோலப்பட்டது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் மேற்படி கைகலப்பில் ஈடுபட்டு அநாகரிக வார்த்தைகளை அள்ளி வீசினார்.

இவருடன் இணைந்து ஏனைய கூட்டமைப்பு பிரதிநிதிகள் கையில் அகப்பட்டவற்றை எடுத்து சகட்டுமேனிக்கு தாக்குதல் நடத்தினர்.

வழமைபோல நேற்றுக்காலை சம்பிரதாயபூர்வமாக மேற்படி அபிவிருத்தி மீளாய்வுக் குழுக் கூட்டம் ஆரம்பமானது.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமான இந்த 2014 ஆம் ஆண்டின் இறுதியான அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

நிகழ்ச்சி நிரலுக்கமைய இணைத்தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இணைத்தலைவர்களின் ஒருவரான வடமாகாண முதலமைச்சர் முதலில் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து இணைத்தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை நிகழ்த்தினார்.

அவர்களது உரையில் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான சுந்தரம் அருமைநாயகத்தின் அறிவுறுத்தலுக்கமைய அரசியல் ரீதியாக பேசுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அத்துடன் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பல அபிவிருத்தித் திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளாது அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரிக்கு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய வேளையில் வட மாகாண சபை அவைத் தலைவர் சிவஞானம், சிவாஜிலிங்கம், சிறிதரன் எம்.பி, விந்தன் கனகரத்தினம், பரம்சோதி, ஐங்கரநேசன், ஆனோல்ட், கஜதீபன் போன்ற வடமாகாண சபை உறுப்பினர்கள் பலரும் இணைத்தலைவர் மேற்படி பேச்சை நியதிக்கு முரணாக குழப்பிக் கொண்டேயிருந்ததுடன், ஒரு கட்டத்தில் சிவாஜிலிங்கம் தனக்கு பேச உரிமையுள்ளது எனத் தெரிவித்து ஒலிவாங்கியை பெற்று நீண்ட உரையை ஆரம்பித்தார்.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் முதலமைச்சரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பேச்சை முடிவுறுத்தி அமருமாறு கேட்டுக்கொண்டனர். எனினும் சிவாஜிலிங்கம் தனது பேச்சை நிறுத்தவில்லை. ஒருகட்டத்தில் ஒலிவாங்கியை அவரிடமிருந்து மீளப்பெறுமாறு பணிக்கப்பட்டபோதே கைகலப்பு ஆரம்பமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலேயே இந்தக் கைகலப்பு ஏற்பட்டது. இச்சமயம் இணைத்தலைவர்களில் ஒருவரான முதலமைச்சர் அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டார். சிறிது நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர். இதனால் களேபரம் கட்டுப்பாட்டினுள் வந்தது.

இக்கைகலப்பில் 5 ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இரு கூட்டமைப்பு உறுப்பினர்களும் காயமடைந்தனர். இக்கைகலப்பையடுத்து இந்த ஆண்டுக்கான இறுதியான அபிவிருத்திக் குழுக் கூட்டம் திகதி அறிவிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. (இ,25)

# காணாமற்போனோர் விவகாரம் 128 புதிய முறைப்பாடுகள் நேற்று

வவுனியா மாவட்டத்தில் மூன்றாம் நாளாக நேற்றும் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் 55 பேர் சாட்சியமளித்தனர்.

அத்துடன் 128 பேர் புதிதாக முறைப்பாடுகளை பதிவு செய்தனர். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை கடந்த இரு தினங்களாக செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று வந்தது. இதில் 80 பேர் சாட்சியமளித்திருந்தனர்.

அத்துடன் 90 புதிய முறைப்பாடுகளும் பதிவாகி இருந்தன.

இந்நிலையில் மூன்றாம் நாள் சாட்சியமளிப்பு வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் 61 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 55 பேர் சாட்சியமளித்தனர்.

புதிய முறைப்பாடுகளாக 128 முறைப்பாடுகளும் பதிவாகின. இன்று இறுதி நாள் அமர்வுக்கு வவுனியா பிரதேச செயலகத்திற்கு 60 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர். அளிக்கப்பட்ட சாட்சியங்களில் அதிகமானவை இராணுவத்திற்கு எதிரானவை ஆகும்.

# விடுதி ஊழியர் மரணம்

வேலணை, சாட்டி கடற்கரையில் அமைந்துள்ள தனியார் விடுதி ஊழியர் ஒருவர் விடுதியில் உணவு உட்கொண்ட சமயம் மயங்கி வீழ்ந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான செரீப் முகம்மது உசைன் (வயது - 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் உணவருந்திக்கொண்டிருந்த குறித்த நபர் திடீரென மயங்கி விழுந்துள்ளார். அவரை வேலணை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சமயம் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் உசைன். இந்த மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எனது கருத்துக்களை திரிபுபடுத்துவது யார்?

## மைத்திரி சீற்றம்

தேர்தல் மேடைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை திரிவுபடுத்த சிலர் முயற்சி செய்வதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சம்பிக்க ரணவக்க எழுதிய 'பாழடைந்த பொருளாதாரம்' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிட்டகோட்டையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாம் ஆட்சிக்கு வந்ததும், இந்த நாட்டில் பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு நாட்டை விட்டு வெளியேற இடமளிப்பதில்லையென நான் கூட்டமொன்றில் கூறியிருந்தேன்.

எனினும், தற்போது அந்தக் கருத்தை திரிவுபடுத்தி நான் விமான நிலையத்தை மூடுவதாகக் கூறியதாக பிரசாரம் செய்கின்றனர். அவ்வாறு செய்வதற்கு எனக்கு மூளையில் கோளாறு இல்லை. எமது வெற்றியின் பின்னர் சிலர் இந்த நாட்டில் இருந்து வெளியேற முயற்சி செய்வார்கள் என்பது எமக்குத் தெரியும்.

எனவே தவறு செய்திருந்தால், அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி சுற்றிவளைப்பது எமது கடமையாகும். அதனைக் கட்டாயமாக செய்ய வேண்டும்.

எனவே அதுபோன்ற பொய்யான கூற்றுக்கள் தொடர்பில் நான் மிகவும் கவலையடைகின்றேன். எவ்வாறு நடந்து கொண்டாலும் நாம் பெற்றிபெறுவோம். அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்றார்.

### தேர்தல்...

சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் முன்னெடுக்கப்படும் தேர்தல் பணிகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றம் உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளை வென்றெடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கான சேவைகளை ஒழுங்காக செய்ய முடியாதுள்ளனர்.

இன்றைய சூழலில் அபிவிருத்தியில் பின்தள்ளப்பட்ட இப்பகுதியை முன்னேற்றுவதற்கு பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருந்த போதிலும் அவற்றை செய்ய விரும்பவில்லை.

வடக்கு மாகாண சபையை கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒருவருடத்திற்கு மேலாக மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்திகளை முன்னெடுக்கவில்லையென்பதை நாம் பார்க்கக்கூடியதாக இருந்தது.

எனவே, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சரியானவரை தெரிவு செய்யும் வகையில் மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பை உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும்.

அந்தவகையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அபிவிருத்தி செயற்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கும் மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதன்போது வலியுறுத்தினார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த, ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

## மலக்கழிவு குறித்த

# நவாலி கூட்டத்திற்கு வலி. மேற்கும் ஆதரவு

(நவாலி)

கல்லுண்டாய் வெளியில் மலக்கழிவு - திண்மகழிவு கொட்டப்படுவதால் ஏற்படும் பாதிப்பு குறித்து இன்று இடம்பெறும் கூட்டத்திற்கு வலி. மேற்கு பிரதேசத்திற்கு அராலி உட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று மாலை 4.00 மணிக்கு கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் திண்மக் கழிவு குறித்த முக்கிய கூட்டம் நவாலி, அந்திரான், முருக மூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்திற்கு வலி. தென் மேற்கில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் வலி. மேற்கைச் சேர்ந்த அராலி பொது அமைப்புக்களும் தமது ஆதரவைத் தெரிவிக்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்று எடுக்கப்படவுள்ள தீர்மானத்தைத் தொடர்ந்து கழிவுகள் கொட்டப்படுவது உடன் நிறுத்தப்படும் என நவாலி அந்திரான் முருக மூர்த்தி ஆலயத் தலைவர் செ. மகேந்திரன் தெரிவித்தார். (92)

# காரைநகர் பிரதேச சபையில் களேபரம் தவிசாளர் மீது தாக்குதல்

(யாழ். நிருபர்)

காரைநகர் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தவிசாளர் வேலாயுதம் ஆனைமுகன் தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து நேற்று மாலை 4.00 மணியளவில் அப்பிரதேசத்தை சேர்ந்த கூட்டமைப்பு உறுப்பினர் தம்பிராசா என்பவருக்கும் தவிசாளருக்கும் இடையே பாரிய முரண்பாடும் கைகலப்புச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தாக்குதல் தொடர்பாக தெரியவருவதாவது, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க செயலாளரினால் 15.12.2014இல் பிரதேச சபைக் கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தவிசாளர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றி ஆதாரங்களை முன்வைத்து விவாதிக்க விருந்தனர்.

இதை அறிந்த தவிசாளர் சபை உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருகைதர முன் தனது சக உறுப்பினர் ஒருவரின் ஒத்துழைப்புடன் 15 நிமிடங்களில் சபையை நடத்தி முடித்து 2015 ஆம் ஆண்டுக்கான பட்ஜட்டும் எதிர்வாதப் பிரதிவாதங்களும் இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

காலை 10.35இற்கு வருகை தந்த உறுப்பினர் க. பாலச்சந்திரன் செயலாளரிடம் கூட்டம் சம்பந்தமாக வினாவியபோது, கூட்டம் முடிந்துவிட்டதென செயலாளர் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு தெரியப்படுத்துவதற்காக கணேசபிள்ளை பாலச்சந்திரன் கணனி மூலம் கடிதம் ரைப் செய்த போது கெட்டவார்த்தைகளால் பேசியபடி வந்த தவிசாளர், கணேசபிள்ளை பாலச்சந்திரன் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் சக உறுப்பினர் துர்க்கேஸ்வரனால் தான் பாதுகாக்கப்பட்டதாகவும் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்துரைத்த கணேசபிள்ளை பாலசந்திரன் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்க தான் ஒரு போதும் துணை நிற்கப்போவதில்லை என்றும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவங்களின் தொடராக நேற்று மாலை கூட்டமைப்பு உறுப்பினர் தம்பிராசா தவிசாளரைத் தாக்கியுள்ளார். (10)

## சமூக சேவைக்கான விருது



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் வலி. தென் மேற்கில் சமூகப் பணியாற்றிய செல்லத்துரை மகேந்திரன் அவர்களுக்கு உயரிய சமூக சேவைக்கான விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் அபிவிருத்திக்காக உயரிய பணியாற்றியமையை முன்னிட்டே செ. மகேந்திரனுக்கு கடந்த வாரம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2103ஆம் ஆண்டு சமூக சேவைக்கு ஆற்றிய பணியினைத் தொடர்ந்து நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியம் சமூகச் சுடர் எனும் பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

விருது பெற்ற செ. மகேந்திரன் அந்திரான் முருக மூர்த்தி கோவில் பரிபாலன சபைத் தலைவராகவும், நவாலி கிழக்கு முதியோர் சங்கத் தலைவராகவும் உள்ளார்.

இதேவேளை, நவாலி முருகானந்தா ச.ச. நிலையம், மானிப்பாய் நோயாளர் நலன்புரிச் சங்கம், நவாலி ஊன்றுகோல் நிறுவனம் ஆகியவற்றின் உறுப்பினர் ஆவார். (92)

# எரிகாயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தனக்குத் தானே தீமூட்டி எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்ததாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உடுப்பிட்டி வாவியடியைச் சேர்ந்த சதாசிவம் ரவீந்திரன் (வயது 41) என்பவரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனக்குத் தானே தீமூட்டி எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சடலம் நேற்றுப் பிற்பகல் விசாரணையை அடுத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது. (பா.இ)

# பிரதம பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தற்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள பிரதம பரீட்சகர்களிற்கான அறிவுறுத்தற் கூட்டம் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் இந்த மாதம் 21,22,23ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மேற்படி பரீட்சையின் அனைத்துப் பாடப் பிரதம பரீட்சகர்களிற்குமான கூட்டமாக இது நடைபெற வுள்ளது. விடைத்தாள் மதிப்பிடும் பணி இந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (60)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் உதவி வழங்குமாறு கோரிக்கை

(நவாலி)

வலி. தென். மேற்கில் வெள்ளப் பாதிப்பால் பாதிக்கப்பட்ட ஜே./ 134 நவாலி வடக்கு மக்களுக்கு குழந்தைகளுக்கான பால்மா உதவிகள், தறப்பாள்கள், நுளம்பு வலைகள் வழங்கப்பட வேண்டும் என நவாலியில் உள்ள பொது அமைப்பொன்று கோரிக்கை விடுத்துள்ளது. (92)

## இலங்கை சிறுவன் பிரித்தானியாவில் மரணம்

பிரித்தானியாவில் வசித்து வரும் இலங்கையை சேர்ந்த சிறுவனொருவன் கால்பந்து மோதி உயிரிழந்துள்ளார்.

சங்கித் ஜெயக்குமார் எனும் 14 வயது மாணவன் பாடசாலையில் விளையாடிக்கொண்டிருந்த போது, வயிற்றில் கால்பந்து பட்டதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளான்.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் ஒரு நாளின் பின்னர் சிறுவன் மரணமடைந்துள்ளார்.

## வெறித்தனம் வெளிப்படும் நிழல் பதிவு...



யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கைகலப்பின் உச்ச கட்டத்தில் கையில் அகப்பட்ட தண்ணீர் போர்த்தலை எடுத்து எதிர்க் கட்சித் தரப்பை நோக்கி வீசி எறிகிறார் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன்....

# இரு பிரதேச சபை உறுப்பினர்கள் மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் உள்ள இரண்டு பிரதேச சபை உறுப்பினர்கள் பொது எதிரணியில் இணையவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அத்துனகல பிரதேச சபையின் உறுப்பினர் இந்திக்க ராஜபக்ஸ மற்றும் மீரிகம பிரதேச சபையின் உறுப்பினர் சோமரத்தின ஜெயநீத்தி ஆகியோரே பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

# சுற்றுலாப் பயணிகளின் கட்டணம் அதிகரிக்கப்படும்

## ரணில் தெரிவிப்பு

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவர் இதனைக் கூறினார்.

2025ஆம் ஆண்டளவில் இலங்கையின் சுற்றுலாத்துறையில் வெற்றிபெற முடியும் என அவர் மேலும் கூறினார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.